JESUS REDEEMS MINISTRIES

# வாலிபர் உலகம்

Volume: 16 | Issue: 05 | July 2025 | Mohan C. Lazarus | Annual Subscription: ₹ 100 | Single Copy: ₹ 10



இயேசுவின் அன்பை
பகிர வேண்டிய நீ, ஒருபோதும்

## மறைந்திராதே!

# உள்ளே...

04



16




30



வாலிபர் உலகம்

இளம் நெஞ்சங்களின் மனதில் வேதத்தின் விளக்கேற்றி, சிந்திக்க வழிகாட்டி, சீஷனாய் மாற்றி, அவர்களை உலகத்திற்கு வெளிச்சமாய் மாற்றுவதே இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியத்தின் உன்னத நோக்கமாகும். விசுவாச இளைஞர்கள் அவனியெங்கும் உருவாக, அவர்களுக்கென்றே மாதந்தோறும் வெளிவரும் பூங்கொத்து இது!

இப்பத்திரிக்கையைக் குறித்ததான உங்களது கருத்துக்கள், உங்களுக்கு பிரயோஜனமாயிருந்த கட்டுரைகள் மற்றும் நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களை, உங்கள் பெயர் மற்றும் ஊருடன், 9750955547 என்ற எண்ணிற்கு SMS அல்லது Whatsapp மூலமாக தெரியப்படுத்துங்கள்.




அனைத்து இயேசு விடுவிக்கிறார் கிளை அலுவலகங்களிலும் சந்தா செலுத்தி நீங்கள் வாலிபர் உலகம் சந்தாதாரராகலாம். youth.jesusredeems.com என்ற website மூலமாகவும் ஆன்லைனில் சந்தா செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். உங்கள் சந்தா தேதி முடியும் நிலையில் இருந்தால் உடனே உங்கள் சந்தாவை புதுப்பிக்க மறவாதிருங்கள்.

JESUS REDEEMS MINISTRIES

**இயேசு விடுவிக்கிறார் வாலிபர் ஊழியம்,**
நாலுமாவடி, தூத்துக்குடி - 628 211.
**Phone: 04639-353333 | Cell:9750955547**
E-mail: youth@jesusredeems.org
www.jesusredeems.com | youth.jesusredeems.com

# தலைவாசல்







## எனக்கு அன்பான வாலிபர்களே!

### இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்கள்!

ஜூன் மற்றும் ஜூலை மாதம் என்றாலே ஒரு பரபரப்பு. ஏனென்றால் வாலிபர்கள் புதிய கல்வியாண்டின் துவக்கத்தில், புதிய ஆர்வத்தோடும், ஆசையோடும் உங்கள் கல்வியை ஆரம்பித்திருப்பீர்கள். தேவன் உங்கள் அனைவரையும் அவருடைய பரலோக ஞானத்தினால் நிரப்புவாராக. மேலும் பள்ளிப் படிப்பை முடித்து, பல கனவுகளோடு கல்லூரி படிப்பிற்கு அடியெடுத்து வைக்கும் அனைத்து வாலிபர்களும் ஒன்றை மனதில் வைக்க வேண்டும். உங்களுடைய முழு நோக்கமும் படிப்பில் இருக்க வேண்டும். பல நேரம் பள்ளிப் படிப்பில் மிகவும் கவனமாக படித்து சாதித்த மாணவர்கள், தங்கள் கல்லூரி படிப்பில் கவனம் செலுத்த தவறி, தடுமாறி, தவறான திசைக்கு செல்வதை பார்த்திருக்கிறேன். பள்ளியில் இருக்கும் போது, தங்கள் படிப்பிலும், பண்பிலும் ஒழுக்கங்களிலும் சிறந்து விளங்கின வாலிபர்கள், கல்லூரிக்குள் சென்றதும் ஒரு பறவையைப் போலச் சிறகடித்து பறக்க முயற்சிக்கின்றனர். அதே நேரத்தில் பள்ளியில் இருந்ததைவிட, கல்லூரிக்கு சென்ற பிறகு தேவனோடு உள்ள உறவை பெலப்படுத்தி, தங்கள் தாலந்துகளை தேவனுக்காக பயன்படுத்தி, கல்லூரி படிப்பிற்கு பிறகு சிறந்து ஜொலிக்கும் மாணிக்கமாக மாறும் வாலிபர்களும் உண்டு.

நீங்கள் எங்கிருந்தாலும், தேவனுக்காக ஒளி வீச வேண்டும். தேவனுடைய ஒளியை உங்கள் பள்ளி, கல்லூரிக்குள் பரவ செய்ய வேண்டியவர்கள் நீங்கள் தான். மலை மேல் இருக்கும் விளக்கைப் போன்று மறைந்திராமல் ஒளி வீச வேண்டும். மேலும் தேவனுடைய எதிர்பார்ப்பு என்னவென்றால், தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளை பயன்படுத்த வேண்டும். தாலந்துகளை பெருக்கிக் கொள்ள வேண்டும். அநேக வாலிபர்கள் கல்லூரி செல்லும் வரை எந்த ஆவிக்குரிய அனுபவமும் இல்லாமல் இருப்பார்கள். ஆனால் கல்லூரி சென்ற பிறகு, தேவனை நன்கு அறிந்து, ஆவிக்குரிய அனுபவங்களிலும், அபிஷேகத்திலும் வளர்ந்து தேவனுக்காக வைராக்கியமாய் எழும்பி செயல்படுவதை பார்த்திருக்கிறேன்.

**எனக்கன்பான வாலிபனே, நீ ஒரு எழுப்புதல் வீரன், உன் பள்ளி, கல்லூரியிலும் வேலை செய்யும் இடத்திலும் தேவனை அறியாத வாலிபர்களுக்கு சுவிசேஷ ஒளியை ஏற்ற தேவன் உன்னை பயன்படுத்த விரும்புகிறார். உனக்கு வரங்களையும் தாலந்துகளையும் தந்து, அநேகரை நீதிக்குள் நடத்த தெரிந்து கொண்டுள்ளார். எழும்பி செயல்படு, மறைந்திராதே, சுவிசேஷ ஒளியை மறைத்து வைக்காத, மதில் மேல் உள்ள விளக்காக ஒளி கொடு. தேவன் உன்னை வல்லமைப்படுத்தி பயன்படுத்துவார் என்பதில் சந்தேகமே இல்லை.**

**எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, தீவட்டிகளை உயர்த்தி,**
**"கர்த்தருடைய பட்டயம் , கிதியோனின் பட்டயம்" என்று முழங்கும்**
ஒரு கூட்டம், உன் பின்னும் எழும்பும்.
அவர்கள் மூலம் பெரிய எழுப்புதலை தேவன் தர ஆயத்தமாக உள்ளார்.
**எழும்பிடு! பெலப்படு! முழங்கிடு!**

கிறிஸ்துவின் பணியில்
**மோகன் சி. லாசரஸ்**

# லாட்டரி விற்றவர்... இன்று "காசி டிராவல்ஸ்" முதலாளி

சாட்சி தொகுப்பு: காட்லின்



*பஸ் ஸ்டாண்டில் லாட்டரி டிக்கெட் விற்று, பேருந்தையே தனது வீடாக வைத்து, கஷ்டபட்டு கார் வாங்கி அதன் மூலம் கடன்பட்டு, அநேக இடத்தில் டிரைவராக வேலை செய்து பல கஷ்டங்களை அனுபவித்து அவற்றை மேற்கொண்டு, இன்றைக்கு 28 Tempo Travelersக்கு சொந்தக்காரராகவும், அநேக ஊழியர்களுக்கு மாதந்தோறும் சம்பளம் கொடுக்கும் அளவிற்கு தேவனால் உயர்த்தபட்டிருக்கும் சகோதரர் ஜேசுதாஸ் அவர்களைச் சந்தித்து அவர்கள் உயர்வுக்கான இரகசியங்களைக் கேட்டுத் தெரிந்துக் கொள்ள நீங்கள் ரெடியா?*

### அண்ணே... உங்களைப் பற்றிச் சொல்லுங்களேன்?

என் பெயர் ஜேசுதாஸ். திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு நடுத்தர குடும்பத்தில் பிறந்தேன். எனது பெற்றோருக்கு நாங்கள் 12 பிள்ளைகள். 9 ஆண்கள் 3 பெண்கள். ஆண் பிள்ளைகளில் நான்தான் மூத்த மகன். எனது அப்பா ஒரு டிரைவராக வேலை பார்த்து வந்தார். நான் 1984ஆம் ஆண்டு 8ஆம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போது வீட்டில் மிகவும் கஷ்டமான சூழ்நிலையினிமித்தம் வீட்டுக்குத் தெரியாமல் வெளியூருக்கு சென்றேன். ஒரு லாட்டரி சீட்டு கடையில் மாதம் 50 ரூபாய் சம்பளத்திற்கு வேலைக்குச் சேர்ந்தேன். கொஞ்ச நாட்களில் எனக்கும் முதலாளிக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், நானே சொந்தமாகப் பஸ்களில் லாட்டரி சீட்டு விற்க ஆரம்பித்தேன். பஸ்ஸிலேயே படுத்துக்கொள்வேன்; அதுதான் எனக்கு வீடு. அங்குள்ள டிரைவர், கண்டக்டர்கள் எனக்கு நல்ல பழக்கம். எனது





சூழ்நிலையைக் கேள்விப்பட்டு எனது அப்பா திரும்ப ஊருக்கு அழைத்துச் சென்று ஓட்டுனர் உரிமம் எடுத்துக் கொடுத்தார். கொஞ்ச நாட்களிலேயே கார் ஓட்டும் அளவிற்கு ஓட்டுநராக மாறினேன். பழையபடி திரும்பவும் அதே ஊருக்கு (கடலூர்) வந்தேன். கடலூரில் மாதம் 150 ரூபாய்க்கு வேலைக்குச் சேர்ந்தேன். 1990 - 91ஆம் ஆண்டுகளில் **Heavy Driver** ஆனேன். அதாவது பஸ் ஓட்ட ஆரம்பித்தேன். நான் ஒரு கிறிஸ்தவ முதலாளியிடம் தான் வேலையும் செய்து வந்தேன்.

### சின்ன வயதிலேயே கஷ்டங்களை அனுபவித்தீர்கள்... சரி, பஸ் டிரைவர் வேலையைத் தொடர்ந்து செய்தீர்களா?

1995ஆம் ஆண்டு எனக்குத் திருமணம் நடைபெற்றது. எனது மனைவி பெயர் சுதா. திருமணம் முடிந்த கொஞ்ச நாட்களில், என்னிடம் டிரைவிங் படித்தவர்கள் எனக்குப் போன் பண்ணி, ''நீ எதுக்கு பஸ் ஓட்டிக் கொண்டிருக்கிறாய்; ஒரு கார் வாங்கிக் கொண்டு சென்னைக்கு வந்தால் நன்றாகச் சம்பாதிக்கலாம்'' என்று சொன்னார்கள்.

இதைக் கேட்டவுடன் எனக்கும் சம்பாதிக்கும் ஆசை வந்து, உடனே நான் எனது மனைவியின் நகைகளை



எல்லாம் அடமானம் வைத்து ஒரு அம்பாசிடர் கார் வாங்கிக்கொண்டு சென்னைக்கு சென்று மறுபடியும் பஸ்ஸிலிருந்து கார் ஓட்டச் சென்றேன்.

### நகை அடமானம் வைத்து கார் வாங்கி சென்னை வந்தீர்கள், சென்னையில் உங்கள் வாழ்க்கை எப்படி இருந்தது? நல்ல சம்பாத்தியம் கிடைத்ததா?

இல்லை, சென்னை வாழ்க்கை நான் நினைத்தது போல் இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டேன். மாதம் தோறும் 4 ஆயிரம் ரூபாய் **due** கட்ட முடியவில்லை. அதுமட்டுமல்லாமல் சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டோம். மிகவும் கஷ்டமான நாட்களாக இருந்தது. அப்பொழுதெல்லாம் வேலை கிடைப்பது மிகவும் கஷ்டம். ஒரு வண்டிக்குப் பத்து டிரைவர்கள் இருப்பார்கள். கிறிஸ்துமஸிற்கு 5 வருடங்கள் ஆடையே வாங்கவில்லை. எனது குடும்பம் மிகப்பெரிய குடும்பம். ஆனால் எந்த நல்லது கெட்டதுக்கும் எங்களைக் கூப்பிட மாட்டார்கள். கையேந்தி பிச்சை மட்டும்தான் எடுக்கவில்லை. அந்த அளவிற்கு மிகவும் கஷ்டப்பட்டோம்.

அந்த நாட்களில் பத்து ரூபாய் இருந்தால் ஒருவேளை சாப்பிடலாம். ஆனால் அந்தப் பத்து ரூபாய் கூட இல்லாமல் சாப்பிடாமல் இருந்த நாட்கள் உண்டு. நல்ல உடையோ, உணவோ இல்லாமல் 300 ரூபாய் வாடகை வீட்டில் தான் வசித்து வந்தோம்.

### சென்னைக்கு வேலைக்காக சென்ற நீங்கள் இத்தனைப் பாடுகளை அனுபவித் துள்ளீர்கள். அதிலிருந்து எப்படி மீண்டு வந்தீர்கள் என்று சொல்ல முடியுமா?

**Due** கட்ட முடியாமல் கஷ்டப்பட்டதால், காரை விற்றுவிட்டு பழையபடி பஸ்ஸில் டிரைவராகச் சென்று, ஒரு **Tourist Bus** ஓட்டினேன். முதன்முதலாக 2004ஆம் ஆண்டு 70,000 ரூபாய்க்கு ஒரு **Tempo Traveller** வாங்கினேன். அதன்பிறகு வருடந்தோறும் வண்டி வாங்க ஆரம்பித்தேன். 2007ஆம் ஆண்டு புதிய வண்டி ஒன்று வாங்கி ''காசி ட்ராவல்ஸ்'' ஒரு



travels ஆரம்பிக்க தேவன் உதவி செய்தார். ஐந்து வண்டிகள் வாங்கும் வரை நானும் ஒரு டிரைவராக வண்டி ஓட்டிக் கொண்டிருந்தேன். 2007ஆம் ஆண்டு முதல் தேவன் என்னை உயர்த்த ஆரம்பித்தார். 2019ஆம் ஆண்டுகளில் ''நெல்லை காசி டிராவல்ஸ்'' மிகவும் பிரபலமாக ஆரம்பித்தது. ஆண்டவருக்கு பயந்து அவருடைய வழியில் நடந்தேன். ஆண்டவர் என்னை உயர்த்தினார்.

**ஓகே... லாட்டரி டிக்கெட் விற்றுக் கொண்டிருந்த உங்களை இன்றைக்கு ஒரு டிரான்ஸ்போர்ட் வைக்கும் அளவிற்கு உயர்த்தி இருக்கிறார்... இந்த உயர்வுக்கு காரணம் என்ன?**

முதலாவது ஆண்டவர் எனக்குக் கொடுத்த தொழிலை உறுதியாகப் பிடித்துக் கொண்டேன். அந்த நாட்களில் நான் காலையில் 4 மணிக்கு எழுந்து ஜெபிப்பேன். முழு வேதாகமத்தையும் 2 முறை படித்து முடித்திருக்கிறேன்.

தினமும் 20 மணி நேரம் உழைப்பேன். ஒரு நாளைக்கு நான்கு மணி நேரம் தான் தூங்குவேன். 5 வண்டிகள் வாங்கும் வரை நானும் ஒரு வண்டி ஓட்டி வந்தேன். அதன்பிறகு வளர வளர டிரைவர்கள் வைத்து ஓட்ட ஆரம்பித்தேன். இப்பொழுது 28 வண்டிக்குச் சொந்தக்காரராக ஆண்டவர் என்னை மாற்றியுள்ளார். வருடத்தில் பத்து வண்டியாவது புதிதாகக் கிடைக்கும்.

முக்கியமாக ஆண்டவருடைய ஊழியத்தை தாங்கத் தேவன் உதவி செய்தார். ஊழியத்தை தாங்கினால் தேவன் நம்மை உயர்த்துவார் என்று எனக்குத் தெரியவே தெரியாது. அது ஆண்டவர் என் மனதில் வைத்தது. அதன்படி செய்து வந்தேன். மாதம் 10,000, 40,000, 50,000 ரூபாய் வரைக்கும் கர்த்தருடைய ஊழியங்களுக்குக் கொடுத்து வந்தோம். ஆனால் நாங்கள் மாதம் 500 ரூபாய் கொடுத்து, ஒரு சின்ன வாடகை வீட்டில் தான் வசித்து வந்தோம். எங்களுக்கென்று ஒரு இடம் வாங்க விருப்பமுமில்லை, அதைப்பற்றி எனக்கு எந்த எண்ணமும் வந்ததும் இல்லை. ஆனால் முதன்முதலாக ஆலயம் கட்டுவதற்கு என்று ஒரு இடத்தை வாங்கிக் கொடுத்தோம்.

அடுத்த வருடமே (2013) சென்னையில் எங்களுக்கு ஒரு சொந்த வீட்டைக் கர்த்தர் கொடுத்தார். இப்போதும் எனக்கு அந்த வீடு வாங்கினது ஒரு புரியாத புதிராகவே இருக்கிறது. தேவனுக்கென்று நாம் ஒன்று செய்யும்போது, ஆண்டவர் நமக்கு 100 காரியங்களைச் செய்வார். ஆண்டவரைத் தேட வேண்டும், ஆண்டவருக்கென்றுக் தாராளமாகக் கொடுப்பதோடு, நாமும் கடினமாக உழைக்க வேண்டும். கடினமாக உழைக்கவும் வேண்டும். அப்போதுதான் தேவன் நம்மை உயர்த்த முடியும். நாம் கடினமாக உழைக்கும்போது கர்த்தர் நம் கையின் பிரயாசத்தை ஆசீர்வதிப்பார்.



**சூப்பர்... கர்த்தருக்கு கொடுத்தீர்கள்... கடினமாக உழைத்தீர்கள் இது தான் உங்கள் வளர்ச்சியின் இரகசியம்... சரி அண்ணே... இன்றைய வாலிபர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

முதலில் ஆண்டவரைத் தேட வேண்டும். தினமும் ஜெபிக்க வேண்டும். கடினமாக உழைக்க வேண்டும். வெறும் ஜெபித்தால் மட்டும் உயர முடியாது. ஆண்டவர் காட்டுகிற பாதையில் செல்ல வேண்டும். எல்லோரும் நிறைய ஆலோசனைகள் கொடுப்பார்கள். அதற்கெல்லாம் செவிசாய்க்கக் கூடாது. நமக்கு இந்தத் தொழில் தான் தெரியும். இதில் தான் நாம் சாதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தால், உயர்வுக்குச் சென்று விடலாம். அதே சமயம் ஊழியங்களை தாங்கிக் கர்த்தருடைய இராஜ்ஜியத்தைக் கட்ட மனமுவந்து கொடுக்க வேண்டும். ஊழியத்தை நேசிக்க, நேசிக்க ஆண்டவர் உங்களை இன்னும் உயர்த்துவார்.

புதிர்: ரேச்சல்

# வேதாகம புதையல் வேட்டை

**கீழே கொடுக்கப்பட்டுள்ள "வேதத்தில் முதலில் யார்" என்று கேட்கப்பட்ட கேள்விகளுக்கு சரியான விடையை வேத ஆதாரத்துடன் எழுதி அனுப்பவும்.**

1. தான் பிறக்கும் முன்பே பெயரிடப்பட்ட முதல் பிள்ளை யார்?
2. முதல் ஆசாரியன் யார்?
3. இரட்டைப் பிள்ளைகளை பெற்றெடுத்த முதல் தாய் யார்?
4. முதல் மேய்ப்பன் யார்?
5. சவப்பெட்டியில் வைத்து அடக்கம் பண்ணப்பட்ட முதல் நபர் யார்?
6. முதல் தோட்டக்காரன் யார்?
7. ஆடு மேய்த்த முதல் பெண் யார்?
8. முதன்முதலில் கழுதை மேய்த்த மனிதன் யார்?
9. முதல் நியாயாதிபதி யார்?
10. முதல் பெண் நியாயாதிபதி யார்?
11. முதன்முதலில் தசமபாகம் கொடுத்தவர் யார்?
12. முதன்முதலில் விருந்து பண்ணினவர் யார்?
13. இரண்டு பெண்களை விவாகம் பண்ணின முதல் மனிதர் யார்?
14. முதல் பராக்கிரமசாலி யார்?
15. காணிக்கைப் பெட்டியை செய்த முதல் மனிதர் யார்?







பதில் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 15.07.2025




**கடந்த மாத வெற்றியாளர்**

**சகோதரி ரோஹிணி, உடுமலை**

**அவர்களை வாழ்த்துகிறோம்.**

### கடந்த மாத விடைகள்

1. ஏவாள் (ஆதி. 3:20)
2. ஆபிரகாம் (ஆதி. 20 :1)
3. ஈசாக்கு (ஆதி. 26:1)
4. ரூபன் (எண். 16:1)
5. லேவி (ஆதி. 49:5)
6. இசக்கார் (ஆதி. 49:14)
7. பென்யமீன் (ஆதி. 49: 27)
8. ஏனோஸ் (1 நாளா. 1:1)
9. இஸ்ரவேல் (1 நாளா. 1:34)
10. அக்ரோவாம் (1 நாளா. 3:1)

Jesus Redeems Youth Ministries, Nalumavadi, Thoothukudi Dist - 628 211.
Cell: 9750955547 | Tel: 04639- 353535. eMail: youth@jesusredeems.org

# எழுப்புதலில் வாலிபர்கள்





செய்தி:
மோகன் சி. லாசரஸ்

*ஆண்டவர் சொன்ன கடைசி கால அடையாளங்கள் இன்றைக்கு நம்மைச் சுற்றிலும் நிறைவேறிக் கொண்டிருக்கின்றன. எருசலேமில் ஒரு எழுப்புதல் உண்டாகி, அங்குதான் முதன்முதலில் சபை ஸ்தாபிக்கப்பட்டு, அங்கிருந்துதான் உலகம் முழுவதும் பரவிச் சென்றதாக அப்போஸ்தலர் 2ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். எழுப்புதலை எடுத்துச் செல்வதற்கு அந்த அக்கினியை பரவச் செய்வதற்கு அப்போஸ்தலர்கள், சீஷர்கள் எனப் பலரை கர்த்தர் பயன்படுத்தினார். அதில் வாலிபர்களை விசேஷமாய் பயன்படுத்தினார். நாம் எழுப்புதலின் காலத்தில் வந்திருக்கிறோம். இயேசுவின் வருகை மிகச் சமீபித்து விட்டது. இந்த எழுப்புதலுக்கு வாலிபர்களாகிய உங்களைத் தான் தேவன் எதிர்பார்க்கிறார்.*

கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்துவதற்காகத் தமஸ்குவை நோக்கிச் சவுல் போகிறான். கர்த்தர் அவனை எதிர்கொள்கிறார்; **"அவன் தமஸ்குவுக்குச் சமீபித்தபோது, சடிதியிலே வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது. அவன் தரையிலே விழுந்தான். அப்பொழுது, சவுலே, சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று தன்னுடனே சொல்லுகிற ஒரு சத்தத்தைக் கேட்டான். அதற்கு அவன், ஆண்டவரே, நீர் யார், என்றான். அதற்குக் கர்த்தர், நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே... அவன் நடுங்கித் திகைத்து, ஆண்டவரே, நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர், நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியதை அங்கே உனக்குச் சொல்லுவேன் என்றார்"** (அப். 9:3-6). சவுலுக்குள் சுவிசேஷத்தை எதிர்க்கிற ஒரு தீவிரம் இருந்தது. இயேசுவின் ஊழியர்களை எதிர்க்கிற ஒரு தீவிரம் இருந்தது. இந்தச் சவுல் என்கிற வாலிபனைத்தான் கர்த்தர் எழுப்புதலுக்காகத் தெரிந்து கொண்டு பயன்படுத்தினார். இவர் மூலமாக எழுப்புதல் உலகத்தின் பல நாடுகளுக்குள் கடந்து சென்றதை நாம் பார்க்கிறோம்.



**பவுலை தேவன் ஏன் பயன்படுத்தினார்? பவுலைக் கொண்டு இவ்வளவு பெரிய எழுப்புதலை உண்டாக்க காரணம் என்ன?**

## தரிசனம் பெற்ற வாலிபன்

ஆண்டவர் தமஸ்குவுக்கு போகும் வழியில் தரிசனமாகி, அவனோடு பேசியபோது, பிரகாசமான வெளிச்சத்தில் சவுல் இயேசுவை தரிசிக்கிறார். ஆண்டவரின் சித்தத்திற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறார். 'நீ செய்ய வேண்டிய காரியத்தை உனக்குக் காண்பிப்பேன்' (அப் 9: 6) என்றும் கர்த்தர் சொல்கிறார். சபையைப் பாழாக்க வேண்டும் அழிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஓடிக்கொண்டிருந்த பவுல், இயேசுவை தரிசித்தவுடனே, ''நான் என்ன செய்ய நீர் சித்தமாயிருக்கிறீர்'' என்று கேட்டு அந்தத் தரிசனத்துக்கு தன்னை ஒப்புக்கொடுத்தார். அதற்கு பிறகு இயேசு அநேகம் முறை அவருக்குத் தரிசனமாகிறார். ஊழியத்தைக் குறித்த தரிசனத்தைக் கொடுக்கிறார் (அப்.16 அதி). கொரிந்து பட்டணத்தில் எதிர்ப்பு வருகிறது. அவர் சோர்ந்துபோன நேரத்தில் தரிசனமாகி 'பவுலே, பயப்படாமல் தைரியமாகப் பேசு' (அப். 18:9) என்று ஆண்டவர் பெலப்படுத்துகிறார். எருசலேம் தேவாலயத்தில் ஜெபித்துக் கொண்டிருக்கும்போது, **ஞானதிருஷ்டி அடைந்து அவர் இயேசுவை தரிசித்தார்** என்று வேதம் சொல்லுகிறது (அப். 22:17). அங்கு ஒரு தரிசனத்தைப்



பெற்றுக் கொள்கிறதை பார்க்கிறோம். பவுல் தேவனின் திட்டத்தைக் குறித்த தரிசனத்தைப் பெற்றுக் கொண்ட மனிதர். அந்த வாலிபனைத்தான் எழுப்புதலில் கர்த்தர் பயன்படுத்தினார்.

## ஜெபிக்கிற வாலிபன்

அவன் மூன்றுநாள் பார்வையில்லாதவனாய்ப் புசியாமலும் குடியாமலும் இருந்தான் (அப். 9:9). கிறிஸ்துவின் சபையை மிகவும் பாழாக்கி, அநேகரை கொலை செய்ததால் துக்கம் தாங்க முடியாமல், 3 நாட்கள் சாப்பிடாமலும், குடியாமலும் வேதனையோடு இருந்தான். அதே தமஸ்கு பட்டணத்தில் அனனியா என்னும் ஒரு சீஷன் இருந்தான். கர்த்தர் அவனுக்குத் தரிசனமாகி, 'சவுல் என்பவன் இப்பொழுது ஜெபம் பண்ணுகிறான், உன் வருகைக்காகக் காத்திருக்கிறான் என்று சொல்கிறார். அனனியா சவுலை சந்தித்து, நீ வந்த வழியிலே உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் என்னை அனுப்பினார் என்றான் (அப்.9:17). ஜெபிக்கிற வாலிபர்களைத் தான் தேவன் எழுப்புதலில் பயன்படுத்துவார். எபேசியர் 6:11ல் எந்தச் சமயத்திலும் ஜெபம் பண்ணுங்கள், பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணுங்கள் என்று எழுதி வைத்திருக்கிறார். பவுலின் ஊழியத்தை கவனித்து பார்க்கும்போது அவர் மன்றாடி ஜெபம் செய்கிறார். கர்ப்ப வேதனையோடு ஜெபம் செய்கிறார் (கலா. 4:19). நான் ஜெபம் பண்ணுவதை போல நீங்களும் ஜெபத்திலே போராடுங்கள் (ரோமர் 15:32) என்று கட்டளையும் கொடுக்கிறார். இவரைக் கொண்டு தான் தேவன் எழுப்புதலை பரவச் செய்தார்.

ஜெபித்த ஜான் நாக்ஸ் என்ற வாலிபன் மூலம் ஸ்காட்லாந்து தேசத்தில் எழுப்புதலைக் கொண்டு வந்தார். நள்ளிரவு 12 மணிமுதல் 3 மணிவரை ஜெபம் பண்ணின ஈவான் ராபர்ட்ஸ் மூலமாகத் தான் வேல்ஸ் தேசம் முழுவதிலும் எழுப்புதலைக் கொண்டு வந்தார். ஜெபிக்காமல் எழுப்புதலை பார்க்க முடியாது. தேவனுக்காகச் சாதித்த எல்லாருமே ஜெபிக்கிறவர்கள். ஜெபிக்கிறவன் மூலமாகத்தான் எழுப்புதலைப் பரவச் செய்ய முடியும்.



## சுவிசேஷத்தைப் பிரசங்கித்த வாலிபன்



பவுல் தாமதம் செய்யாமல் தீவிரமாய் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தான் (அப். 9:20). சுவிசேஷம் அறிவிக்கிறவர்கள் மூலமாகத்தான் எழுப்புதல் அக்கினியை பரவச் செய்ய முடியும். பவுல் ஜெபம் மட்டும் பண்ணாமல், சுவிசேஷத்தை துரிதமாய் அறிவித்தார். சுவிசேஷத்தை அறிவித்து வந்தும் மேன்மைபாராட்ட எனக்கு இடமில்லை. சுவிசேஷத்தை பிரசங்கியாமல் இருந்தால் எனக்கு ஐயோ (1 கொரி. 9:16) என்று முழங்கினார். இயேசுவின் சுவிசேஷத்தை அறிவிக்க உனக்குத் திராணி இருந்தும் நீ சுவிசேஷம் அறிவிக்காவிட்டால் உனக்குச் சாபம் வரும் என்று பவுல் குறிப்பிடுகிறார். சுவிசேஷம் அறிவிக்கிறவர்களைத் தான் தேவன் எழுப்புதலில் பயன்படுத்துவார்.

## ஜீவனைக் கொடுக்க ஆயத்தமாக இருந்த வாலிபன்

"நான் போகிற இடமெல்லாம் எனக்குக் கட்டுகளும் உபத்திரவங்களும் வைக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிந்திருக்கிறேன்." எருசலேமிற்கு சென்றால் உயிருக்கு ஆபத்து என்று தெரிந்தும், எதைக் குறித்தும் கவலைப்படாமலும், பயப்படாமலும் இயேசுவுக்காக நிந்திக்கப்படுவதற்காக மாத்திரமல்ல, அவருக்காக என் ஜீவனைக் கொடுக்கவும் நான் ஆயத்தமாக இருக்கிறேன் (அப். 20:22-34) என்பதாகப் பவுல் சொல்கிறார். அவர் எதற்காக என்னைப் பிடித்தாரோ அந்த ஊழியத்தை செய்து முடிக்க நான் விரும்புகிறேன். பாடுகளைக் கண்டு, நிந்தைகளைக் கண்டு, பயமுறுத்தல்களைக் கண்டு அவர் பின்வாங்கவில்லை. அதனால்தான் அவர் மூலமாகத் தேவன் எழுப்புதலைப் பரவச் செய்தார்.

**எனக்கன்பான வாலிபர்களே! ஆண்டவருக்காக வைராக்கியமாக எழுப்புதலை பரவச் செய்கிற வாலிபர்கள் வேண்டும், வாலிப பெண் பிள்ளைகள் வேண்டும். அப்படிப்பட்ட வாலிபர்களைத்தான் தேவன் தேடுகிறார். பவுலைப் போல வாலிபர்கள் ஆண்டவருக்கு வேண்டும். சாக்குப்போக்கு சொல்லுகிற வாலிபர்கள் அல்ல, உயிரைக் கொடுத்த ஆண்டவருக்காக நான் எதையும் செய்ய ஆயத்தம், எனக்காகச் சிலுவையில் இரத்தம் சிந்தின ஆண்டவருக்காக எதையும் செய்ய ஆயத்தம் என்று சொல்லக்கூடிய வாலிபர்கள் இயேசுவுக்கு வேண்டும். பவுலைப் போல் எழும்ப நீ ஆயத்தமா?**

# நான் Doctorஆ இல்ல Designerஆ

Heart Beat

ஆலோசனை: அலி




**நான் +2 தேர்வில் 500க்கும் மேல் மதிப்பெண் எடுப்பேன் என்று என் பெற்றோர் எதிர்பார்த்தனர். ஆனால் நான் 410 மதிப்பெண்கள் மட்டுமே எடுத்து வெற்றிபெற்றேன். என்னைப் பெரிய ஒரு மருத்துவராக்க வேண்டும் என்பதே என் பெற்றோரின் ஆசை.**

**ஆனால் எனது விருப்பம் எல்லாமே Designing, விளையாட்டு மற்றும் Extracurricular Activities மீது தான் இருக்கிறது. டாக்டர் படிப்பதற்கு ரொம்ப hard work பண்ணி படிக்க வேண்டும். ஆறு வருடங்கள் வேறு எந்த entertainmentம் இருக்காது. முழுக்க முழுக்க படிக்க வேண்டும். ஆனால் Visual Communication எடுத்தால் டிசைனிங் போன்றவற்றை படிக்கலாம். மேலும் எனது தாலந்துகளை வெளிப்படுத்தலாம். ஆனால் என் பெற்றோர் என்னைக் கட்டாயப்படுத்துகிறார்கள். என்ன செய்வது ? உதவி செய்யுங்கள். - உமா, ஊட்டி.**

அன்பு சகோதரி உமா, உங்களின் கல்லூரி படிப்பிற்காகப் பெற்றோரோடு போராடுவது தெரிகிறது. உங்களை எப்படியாவது டாக்டராக்க வேண்டும் என்பது பெற்றோரின் ஆசை. ஆனால் நீங்கள் **Medical field** போகாமல் **Visual Communication** படித்து டிசைனிங் **field**ல் உங்கள் தாலந்தை வெளிப்படுத்தலாம் என்று யோசிப்பது புரிகிறது.

எந்த **Profession** எடுத்தாலும் அதில் கடினமாக உழைக்க வேண்டும். அதாவது கவனம் செலுத்தி படிக்க வேண்டும். அப்பொழுதுதான் எந்தத் துறையிலும் சாதிக்க முடியும். ஏதாவது ஒரு **course** படித்தால் போதும், ரொம்ப கவனம் செலுத்தாமல் ஒப்புக்கு படித்தால் போதும் என்ற எண்ணம் தவறானது. **Visual Communication course** எடுத்துப் படித்தாலும், அதில் முழு கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் அந்தத் துறையில் சாதிக்க முடியும். டிசைனிங் துறையில் சாதனை படைத்த அத்தனை பேரும் கடினமாக உழைத்தவர்கள், இரவு பகல் பாராமல் முழு மூச்சாக அந்தத் துறையில் படித்தவர்கள். எனவே டாக்டர் படிப்பு என்றால் **hard work** பண்ண வேண்டும், மற்ற எந்த **field**லும் சாதிக்க **hard work**, கவனம், விடாமுயற்சி தேவை இல்லை என்று யோசிப்பது மிகத் தவறு. எந்தத் துறையானாலும் கவனம் செலுத்தி படிப்பதும், விடாமுயற்சியோடு முயல்வதும் மிக முக்கியம். உமா, உங்கள் **mind set** முதலில் மாற வேண்டும்.

மேலும் எந்த துறையில், என்ன படிக்க வேண்டும் என்ற தெளிவு மிக முக்கியம். **Visual Communication** ஒரு **Base**. அதிலிருந்து எந்த **branch specialize** செய்யப் போகிறீர்கள் என்று யோசிக்க வேண்டும்.

**i) Graphic Design**
**ii) U 1/ U x Design**
**iii) Animation & Motion graphics**
**iv) Illustration**

இப்படி பல **Branches** இருக்கிறது. இதில் உங்கள் விருப்பம் என்ன என்பதை தேர்ந்தெடுப்பது நல்லது.

மேலும் உங்கள் பெற்றோரிடம், உங்களுடைய விருப்பத்தைச் சொல்லும்போது, படிப்பில் உங்களுக்கு இருக்கும் **Strength** மற்றும் **weakness** என்ன என்பதை பொறுமையாக எடுத்துச் சொல்லுங்கள். மேலும் **Designing studies**ல் என்ன **scope**






இருக்கிறது என்பதை Detail study பண்ணின பின்பு, பெற்றோரிடம் தெளிவாகச் சொல்லுங்கள்.

எல்லா பெற்றோரைப் போல, உங்கள் பெற்றோரும் தங்கள் மகளின் எதிர்காலம் நன்றாக இருக்க வேண்டும் என்று விரும்புவதால் doctor profession choose பண்ணுகிறார்கள். மேலும் இப்பொழுது உள்ள Trendல் scope உள்ள ஒரு profession Designing என்பது அவர்களுக்குத் தெரியாது என்பதால் பயப்படுகிறார்கள். உங்கள் வாழ்க்கையில் நீங்கள் தவறான படிப்பை choose பண்ணி கஷ்டப்படக் கூடாது என்பது அவர்களின் ஆதங்கம். So உங்கள் பெற்றோரின் feelingsஐயும் புரிந்து கொள்ளுங்கள்.



### நீங்கள் செய்ய வேண்டிய சில Homework...

- நீங்கள் படிக்கப் போகிற Visual Communication Studies குறித்து நன்கு study பண்ணுங்கள்.
- மேலும் உங்களின் designing professionல் Graphic Designingயின் scopes என்ன என்பதை Research செய்து அதின் Advantage, wide range of Job opportunity போன்றவற்றை நன்கு அறிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் பெற்றோரிடம் உங்களின் விருப்பம், மேலும் இந்த designing courseன் பயன்கள், பலன்கள் போன்றவற்றை அவர்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்லுங்கள்.
- அதே நேரத்தில் டாக்டர் படிப்பில் உங்களது இயலாமையையும் சொல்லுங்கள். +2 படிப்பில் உங்களுக்கு ஏற்பட்ட பின்னடைவு மற்றும் மார்க் குறைந்த காரணத்தை நீங்கள் சொல்லும்போது, அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.
- ஆனால் இந்த Visual Communication courseஐ ஆரம்பத்திலிருந்து கவனம் செலுத்தி படிக்க முற்படுங்கள். விளையாட்டுத்தனமாக இருந்தால், entertainmentக்காக focus இல்லாமல் படித்தால் சாதிக்க முடியாது. சோர்ந்து போய் முற்றிலும் தோல்வியடைந்து உட்கார்ந்து அழத்தான் முடியும்.

### நீங்கள் செய்யக்கூடாத சில காரியங்கள்

- ஒரு வேளை இவ்வளவு சொல்லியும் விவரித்தும், உங்கள் பெற்றோர் கேட்கவில்லை என்றால் மனம் தளர்ந்து போக வேண்டாம்.
- அநேக நேரம் சில மாணவர்கள் தங்களுக்குப் பிடித்த படிப்பு கிடைக்கவில்லை என்றால், தவறான முடிவுகளை எடுத்துவிடுகிறார்கள். நீங்கள் எக்காரணத்தைக்கொண்டும் அப்படி செய்ய முற்படக் கூடாது.
- உங்கள் பெற்றோர் புரிந்து கொள்ளும் வரை பொறுமையாய் இருங்கள்.
- ஆமா, சிலவேளை உங்கள் பெற்றோர் உங்களுடைய நிலமையைப் புரிந்து, மனம்மாற வாய்ப்பு உண்டு. நீங்கள் நம்பிக்கையோடு செயல்படுங்கள்.
- உங்களுடைய கனவு படிப்பான designing படிப்பு நிச்சயம் நிறைவேறும். மேலும் உங்களுடைய ஒவ்வொரு முயற்சியிலும் இயேசு உதவி செய்வார். உங்களுடைய பெலவீனத்தைக் குறித்து கவலைப்பட வேண்டாம், பயப்படவும் வேண்டாம். தொடர்ந்து நம்பிக்கையோடு முன்னேறிச் செல்லுங்கள்.

***All the Best!!***

முகப்பு செய்தி: சதீஷ்

# மறைந்திராதே!









தேவன் தந்த திறமைகளை வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்ட தவறினால், நமக்கு வரவேண்டிய செல்வம், உயர்பதவி, செல்வாக்கு, புகழ் போன்றவைகளை தவற விட வேண்டிய நிலமை ஏற்படும். உலகம் நம்மைத் தேடிவந்து நம் திறமைகளைக் கண்டறிந்து உயர்ந்த பதவி தரப்போகிறது என்று காத்திருந்தால், ஏமாற்றம்தான் மிஞ்சும். உங்கள் திறமைகளையும், அறிவையும் வெளி உலகத்திற்கு எடுத்துக்காட்ட வாய்ப்புகள் வந்தால், நிச்சயம் அவற்றை தவறவிடாமல், அதை உங்கள் வெற்றிக்கான முன்னோட்டமாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் திறமைகளை மறைக்காதீர்கள், வெளி உலகத்திற்கு காண்பியுங்கள்.

தாலந்து என்பது தேவன் நமக்குத் தருகிற பொறுப்புகளையும் திறமைகளையும் குறிக்கிறது. சிலருக்குள் பாடுகிற தாலந்து, ஜெபிக்கிற தாலந்து, பிரசங்கம் பண்ணும் தாலந்து எனப் பல தாலந்துகள் இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவிதமான தாலந்துகளைக் கர்த்தர் கொடுத்திருக்கிறார். அதை அவருக்காக பயன்படுத்த வேண்டும் என்று விரும்புகிறார். எகிப்து தேசத்திற்கு அடிமையாகக் கொண்டு போகப்பட்ட யோசேப்பு, ஆண்டவர் அவனுக்குக் கொடுத்த திறமைகளை வைத்து போத்திபார் வீட்டிலும், சிறைச்சாலையிலும் உயர்ந்தவனாக காணப்பட்டான். அதுமட்டுமின்றி தேவன் தந்த ஞானத்தால் எகிப்து தேசம் முழுவதும் பஞ்சத்தால் பாதிக்கப்படாதபடி காத்துக்கொண்டான். "பின்பு பார்வோன் யோசேப்பை நோக்கி தேவன் இவையெல்லாவற்றையும் உனக்கு வெளிப்படுத்தியிருக்கிறபடியால், உன்னைப்போல விவேகமும்

ஞானமுள்ளவன் வேறொருவனும் இல்லை" (ஆதி. 4:38) என்றான். ஆண்டவர் அவனுக்குள் வைத்த ஞானத்தை தேவனுடைய நாமம் மகிமைக்காக பயன்படுத்தியது போல நீங்களும் உங்கள் தாலந்துகளை அவருக்காக பயன்படுத்தி ஆண்டவரை மகிமைப்படுத்துங்கள்.

இயேசு வாழ்ந்த நாட்களில் அவரைச் சுற்றி எப்போதும் பரிசேயர்களும், சீஷர்களும் இருந்து கொண்டே இருந்தனர். இவ்விரு கூட்டத்தாருக்கும் அவர் தாலந்தைக் குறித்து உவமைகளின் வாயிலாக செய்திகளை சொன்னார். **"அவனுடைய திறமைக்குத் தக்கதாக ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும் ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து உடனே, பிரயாணப்பட்டு போனான்"** (மத்தேயு 25:18). ஐந்து தாலந்துகளையும் இரண்டு தாலந்துகளையும் பெற்றவர்கள் மிகுந்த பிரயாசப்பட்டு பெற்றதை இரட்டிப்பாக மாற்றினார்கள். ஒரு தாலந்தைப் பெற்றவன் அதை பெருகப்பண்ணுவதற்கு பிரயாசப்படாமல், புதைத்து வைத்தான். அவன் திட்டமிட்டு பிரயாசப்பட்டு ஜாக்கிரதையோடு செயல்பட்டிருந்தால், அவன் ஒரு தாலந்தை இரட்டிப்பாக்கி இருக்கலாம். அவனுக்கு நல்ல வாய்ப்புகளும், சூழ்நிலைகளும் இருந்தபோதிலும், பயன்படுத்த தவறியதால் தாலந்தை இழந்து போனான். உங்களுக்குள் இருக்கும் திறமைகளை மறைத்து வைக்காமல், ஆண்டவர் இராஜ்ஜியத்திற்கு பிரயோஜனம் உண்டாகும்படி பயன்படுத்த ஆரம்பிக்கும் போது, உங்களுக்குள் இருக்கும் தாலந்துகள் இரட்டிப்பாகப் பெருகும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.



**எனக்கன்பான வாலிபர்களே! தேவன் உங்களுக்கு கொடுத்திருக்கிற தாலந்து என்னவென்று கண்டுபிடியுங்கள். அவற்றை மறைத்து வைக்காமல் பயன்படுத்துவதற்குப் பிரயாசப்படுங்கள். நீங்கள் மற்றவர்களைப் போல செயல்பட முடியவில்லை என்றாலும், ஆண்டவர் உங்களுக்கு கொடுத்திருக்கும் தாலந்துகளுக்கு ஏற்ப நீங்கள் செயல்பட ஆரம்பிக்கும் போது உங்களுக்குள் இருக்கும் வரங்கள், கிருபைகள், வல்லமைகள் பெருகுவதைக் காண்பீர்கள். தாலந்தைக் குறித்து நிச்சயமாக கர்த்தருக்குக் கணக்கு கொடுக்க வேண்டும். "உள்ளவன் எவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவன் எவனோ அவனிடத்தில் உள்ளதும் எடுத்துக் கொள்ளப்படும்" (மத்.13:12).**

**திசையன்விளையில்...**

**வாலிபர் எழுப்புதல் கூடுகை**

**ஜூலை 27,**
**ஞாயிற்றுக் கிழமை**
**நேரம் : 3pm - 5:30pm**

**இடம்:**
**உலக எழுப்புதல் ஜெப மையம்**
**M.L மருத்துவமனை அருகில்**

செய்தியும் ஜெபமும்: **சகோ. அவினாஷ்**

தொடர்புக்கு : 94878 10845 / 97509 55548



# Seeds of Revival

# எழுப்புதலின் விதைகள்!




மிஷெனரி பயணம்: வில்லியம்

**எழுப்புதல் வீரர்களே...! கடந்த மாதம் ஜேம்ஸ் சால்மர்ஸ் அவர்களின் மிஷனெரிப் பணியைப் பற்றியும் அவர் இரத்த சாட்சியாக மரித்ததையும் குறித்து அறிந்து கொண்டோம். இந்த மாதம் ஸ்காட்லாந்து தேசத்தில் பிறந்து, சிறுவயதிலேயே இயேசுவின் அன்பை உணர்ந்து, எந்த ஐரோப்பியரும் கால்பதிக்காத நைஜீரியாவின் கலபாரில் களமிறங்கிய ஒரு பெண் மிஷனெரியைப் பற்றித் தான் பார்க்கப் போகிறோம். யார் இவர் என்று தானே யோசிக்கிறீர்கள்!**

1848ஆம் ஆண்டு டிசம்பர் 2ஆம் நாள் ஸ்காட்லாந்து தேசத்தில் மிகவும் ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார் மேரி ஸ்லேஸர். தனது தகப்பனார் மிகுந்த குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டதினால் இவள் தனது 11ஆம் வயதிலேயே குடும்பத்தைத் தாங்க வேண்டுமென்று பகல் நேரத்தில் ஒரு தொழிற்சாலையில் வேலை செய்துவிட்டு, இரவு ஒரு பாடசாலைக்குச் சென்று படித்து வந்தாள். ஒரு வயதான அம்மா கூறிய செய்தியின் மூலமாக ஆண்டவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆண்டவரை அதிகமாக நேசித்து, பாடப்புத்தகத்தை எடுத்துச் செல்வதோடு வேதாகமத்தையும் எடுத்துச் சென்று படிப்பாள்.

மேரியின் தாயார் மிகவும் பக்தி நிறைந்த ஒரு கிறிஸ்தவப் பெண். அடிக்கடி தன்னுடைய பிள்ளைகளை அழைத்து இயேசு கிறிஸ்துவின் அன்பை பற்றியும், ஆப்பிரிக்காவில் உள்ள பிள்ளைகளுக்குக் கிறிஸ்துவின் அன்பைப் பற்றித் தெரியாது என்பதையும் எடுத்துச்சொல்வார்கள். இதினிமித்தம் மிஷனெரி பணிக்கான ஓர் ஆழ்ந்த பாரத்தை மேரி பெற்றுக்கொண்டாள், அவள் தன் தாயாரைப் பார்த்து "அம்மா நான் ஆப்பிரிக்கச் சிறுவர்களுக்கு நற்செய்தி அறிவிக்க ஒரு மிஷனெரியாகச் செல்வேன்" என்று அடிக்கடி சொல்வதுண்டு. மேரி 14 ஆண்டுகள் 10 மணி நேரம் தொழிற்சாலையில் வேலை செய்தாள். தனது ஓய்வு நேரத்திலெல்லாம் ஆண்டவருக்காக என்ன செய்ய முடியுமோ அதையும் செய்து வந்தாள்.



அப்பொழுதெல்லாம் ஆப்பிரிக்கா கண்டம் தான் அவள் கண் முன் காட்சியளித்துக் கொண்டிருந்தது.

ஆப்பிரிக்கா எதனால் "இருண்ட கண்டம்" என்று அழைக்கப்படுகிறது என்பதை வெகுவிரைவில் புரிந்துகொண்டாள் மேரி. அங்கே பாவம், கொடுமை, அசுத்தம் முதலிய தீமைகள் நிறைந்த ஒரு நிலமை யாகவே காணப்பட்டது. அடிமை வியாபாரம் தாராளமாக நடந்து கொண்டிருந்தது. ஆண்களும், பெண்களும், பிள்ளைகளும் ஈவு இரக்கமின்றி பிடிக்கப்பட்டு அடிமைகளாக விற்கப்பட்டு, மிருகங்களைக் காட்டிலும் மோசமாக நடத்தப்பட்டார்கள். இரட்டை குழந்தைகள் பிறந்தால் அக்குழந்தைகளில் ஒன்று பிசாசுக் குழந்தை என்றும், அந்தத் தாய் ஒரு பெரிய பாவத்தைச் செய்திருப்பதாகவும் பூர்வீகவாசிகள் நினைத்து இரண்டு குழந்தைகளையும் காட்டு மிருகங்களுக்கு இரையாக வீசி எறியும் பழக்கத்தில் இருந்தனர்.



மேரி அவ்விடத்து மக்களின் குடிசைகளில் வாழ்ந்து, அவர்களின் உணவாகிய மீன், கிழங்கு, பழங்களையே சாப்பிட்டு வந்தாள். அந்த மக்களுக்கு உடைகளைத் தயாரித்தும், எழுதப் படிக்கப் போதிக்கும் ஆசிரியையாகவும், பிணிகளைத் தீர்க்கும் செவிலித்தாயாகவும் சேவை செய்துவந்தாள். அவர்களுக்குள் ஏற்படும் சண்டைகளைத் தீர்த்து வைக்கும் தலைவியாகத் தாயன்போடு அவர்களை அரவணைத்துச் சரியான வாழ்க்கைப் பாதையில் நடத்தினபடியால் அவளை அம்மக்கள் "அம்மா" என்றே அழைத்தனர். இதனால் "அம்மா ஸ்லேஸர்" என்ற பெயர் நிலைத்துவிட்டது.

மேரி ஆப்பிரிக்காவின் உட்பகுதிக்குச் செல்ல வேண்டும் என்ற ஆர்வத்தில் தன்னோடு மூன்று ஆப்பிரிக்க ஆண்பிள்ளைகளையும் ஒரு சிறிய பெண்ணையும், ஒரு குழந்தையையும் அழைத்துச் சென்றாள். இருண்ட காடுகளின் வழியே புகுந்து ஓர் உட்பகுதி கிராமத்தை அடைந்தனர். அந்தக் கிராம மக்களுக்கு மேரி உடைகளைக் கொடுத்து, படிக்கவும் தைக்கவும் கற்றுக்கொடுத்தாள். இயேசுவின் இனிய கதைகளைத் தவறாமல் சொல்லி வந்தாள். மேரி பலமுறை அநேக மைல்கள் நடந்து சென்று உட்பகுதி ஆப்பிரிக்க இனமக்களில் எழும்பும் சிறிய சண்டைகளைத் தீர்த்து வைப்பாள். அவளுடைய நேர்மையான நியாயத்தீர்ப்புகளை அவ்வின மக்கள் ஏற்றுக் கீழ்ப்படிந்தனர். அவள் பணிபுரிந்த அப்பகுதிகள், இங்கிலாந்து அரசாங்கத்தின் ஆட்சிக்குள் வந்தபோது, மேரியை அரச பிரதிநிதியாக நியமித்தனர். "வெள்ளை அரசி" என்ற பட்டப்பெயரால் மேரி மிகவும் புகழப்பட்டாள்.

மேரி ஆப்பிரிக்காவில், அந்த மக்களைப் போலவே மிக எளிமையான வாழ்க்கை வாழ்ந்து வந்தாள். இரட்டைக் குழந்தைகள், அநாதைகள், மீட்கப்பட்ட அடிமைகள் என்று பலர் அவளால் பாதுகாக்கப்பட்டனர். அடிமை வியாபாரம் நடக்கிற இடங்களிலும் நரமாமிசப் பட்சினிகள் என்று அழைக்கப்படுகின்றவர்கள் மத்தியிலும் எவ்வித பயமுமின்றி கிறிஸ்துவின் சேவையில் ஈடுபட்டாள்; முதுமைப் பிராயத்திலும் உற்சாகத்தோடு பணிபுரிந்தாள். சைக்கிளில் பிரயாணம் செய்து கிராமங்களில், சேவை செய்தாள். சில சமயங்களில் அவளை நாற்காலியில் உட்கார வைத்துச் சுமந்து செல்வர். இவ்விதம் மேரி வயது சென்ற நிலமையிலும் ஆப்பிரிக்க மக்களை நேசித்து அவர்களுக்குப் பணி செய்து வந்தாள்.

பிரிட்டிஷ் அரசாங்கம், மேரியை ஆப்பிரிக்காவின் அந்தப் பகுதிகளுக்கு நீதிபதியாக நியமித்தது. பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் முதல் பெண் நீதிபதியாக நியமனம் பெற்றவர் மேரி ஸ்லேஸர் அவர்களே. தனக்குக் கிடைத்த உயர்பதவியை கிறிஸ்துவுக்கென்று பயன்படுத்தினார். ஆப்பிரிக்க நாட்டுக் குடிமக்களும், அங்குப் பணி புரிந்து வந்த பிரிட்டிஷ் அதிகாரிகளும் கிறிஸ்துவை ஏற்க வேண்டும் என்ற நோக்கத்தோடு அங்கு நீதிபதியாகப் பணியாற்றினார்.

மேரி ஸ்லேஸர் தன் சுயதேசத்திற்குத் திரும்பிப் போகவில்லை. கடைசி மூச்சுவரை கிறிஸ்துவின் பணியைச் செய்ய ஆப்பிரிக்காவிலேயே இருந்துவிட்டார். பலவீனம், முதுமை, நோய்வாய்ப்படுதல் போன்ற இவைகள் ஒன்றும் அவர்களின் பணியைத் தடைசெய்ய முடியவில்லை. நடமாட முடியாத நிலையிலும் படுக்கையில் இருந்தவாறு ஜெபித்துக் கொண்டே இருப்பார். அவர்களுடைய நினைவுகளெல்லாம் பரலோகத்தைப் பற்றியதாகவே இருந்தது. இறுதியில் 1915ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13ஆம் நாள் பரம இராஜாவின் சந்நிதியை அடைந்தார்கள்.

**இதை வாசித்துக் கொண்டிருக்கும் வாலிபர்களே! மேரி சாதாரண பெண் தான்; ஆனால் கிறிஸ்துவை அறிந்தவுடன், மிகவும் ஆபத்தான, மொழி தெரியாத, முற்றிலும் மாறுபட்ட உணவுப் பழக்கங்கள், விலங்குகள், ஆபத்தான மக்களைக் கொண்ட ஆப்பிரிக்க கண்டத்திற்கு சென்று, அவர்கள் மத்தியில் ஊழியம் செய்து திரளான ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தினார்கள். பல மிஷனெரிகள் பரந்து விரிந்திருக்கும் இந்தியாவிற்கு வந்து, மொழியைக் கற்று ஊழியம் செய்து ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் நடத்தி இரத்த சாட்சியாய் மரித்தார்கள். நாம் நம் பாரத தேசத்தில் இருக்கிற 148 கோடி ஜனங்களுக்கு என்ன தியாகம் செய்யப் போகிறோம். சிந்திப்போம், செயல் படுவோம், இது மௌனமாய் இருக்கின்ற காலமல்ல, இது விதைக்கின்ற காலம்...!**

சாதனை: சுமா கிரேஷன்

# நோக்கத்தை நோக்கிய பயணம்!!










**இளம் சாதனையாளர்களுக்கு என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்!**

இந்த உலகத்தில் மனிதர்களாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு நோக்கம் உள்ளது. சில நபர்கள் தான், அந்த நோக்கத்தை அறிந்து சாதனையாளர்களாக உருவெடுக்கின்றனர். பல பேர் தங்கள் வாழ்வின் நோக்கத்தை அறியாமல், இன்னும் சூழ்நிலைகளையே குறை கூறிக்கொண்டு இருக்கின்றனர். தன்னுடைய வாழ்வின் நோக்கத்தை அறிந்து, தன்னுடைய மன உறுதியினால் அடைந்த சாதனையை மற்றவருக்கு முன் உதாரணமாகக் காட்டும் சாதனையாளரின் வாழ்க்கை உங்கள் முன்...

ஜான் ஃபோப்பி (John Foppy) அமெரிக்காவில் பிறந்தவர். பிறவியிலேயே இவர் இரண்டு கைகள் இல்லாமல் உடலில் சில மாற்றங்களுடன் பிறந்தார். இதனால் இவரைப்

பரிசோதித்த மருத்துவர்கள் இவரால் சாதாரண மனிதர்களைப் போல இருக்க முடியாது என்று கூறினர். ஆனால் ஜானின் பெற்றோர் மிகுந்த தன்னம்பிக்கையுடன் அவரை வளர்த்தனர். தங்களுடைய மற்ற குழந்தைகளைப் போலவே இவரையும் நேசித்தனர். ஜான் தன்னுடைய 10 வயதுக்குள் தனது கால்களைப் பயன்படுத்தி தன்னுடைய அன்றாட வேலைகளைச் செய்யத் தொடங்கினார். தன்னுடைய 16ஆம் வயதில் **haiti**க்கு சென்றபோது, அவரை ஒரு சிறுவன் கட்டிப்பிடித்தான். ஆனால் ஜான் கைகள் இல்லாததால் அந்த அன்புக்கு பதில் அளிக்க முடியாமல் போனது. இதனால் தனது வாழ்க்கையின் நோக்கத்தைக் கண்டுபிடித்து அதை மற்றவர்களுக்கு முன் உதாரணமாகக் காட்ட நினைத்தார். பின்னர் அவர் தொடர்பியல் மற்றும் சமூகப் பணியியல் துறையில் பட்டம் பெற்றார் **{B.Sc (Communication), MSW Master of Social work}**, அதோடு புகழ்பெற்ற பேச்சாளர் **Zig Ziglar**யிடம் பயிற்சி பெற்று உலகம் முழுவதும் 15 நாடுகளில் **Motivational Speech** கொடுத்துள்ளார். அதுமட்டுமல்லாமல் அவர் எழுதிய **"What's your Excuse?"** என்ற புத்தகம் 6 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது அவர் **Society of St. Vincent de Paul** என்ற அமைப்பில் இயக்குநராகச் செயல்பட்டு, பலருக்கு உதவி வருகிறார். தனது கால்களைப் பயன்படுத்தி எழுதுதல், சமைத்தல், கார் ஓட்டுதல் போன்ற பல வேலைகளைத் தானாகவே செய்து கொள்வார். தன்னிடம் கைகள் இல்லை என்று ஒருபோதும் எண்ணாமல், தன்னைக் காண்கிற எல்லாருக்கும் தன்னம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றார். அவர் செல்லும் இடமெல்லாம் தன்னைக் குறித்து கவலைப்பட அல்ல; தன்னிடம் உள்ள தன்னம்பிக்கையை வெளிக்காட்டவே செல்கிறார். இன்று மிகப்பெரிய பேச்சாளராக வலம் வருகிறார்.



***இதை வாசிக்கும் நண்பர்களே! முதலாவது நம்முடைய வாழ்வின் நோக்கத்தை அறிந்தோமானால், ஒருபோதும் சூழ்நிலைகளைப் பார்த்துச் சாக்குப்போக்கு சொல்லிக் கொண்டிருக்கமாட்டோம், அதை எதிர்த்துப் போராடி வெற்றிக் கொள்வோம்!!***





# வாய்ப்பைப் பயன்படுத்தியவர்!!

இயேசுவானவர் அன்று முழுவதும் மக்களுக்கு போதித்துக் கொண்டிருந்தார். நேரம் ஆனபடியால் சாப்பாடு கொடுக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார். ஐயாயிரம் பேருக்கும் அதிகமானோர் அங்கு இருந்தபடியால் சீடர்கள் கலக்கமடைந்தார்கள். ஆனால் அங்கு வந்திருந்த சிறுவன் தன்னிடத்தில் இருந்த 5 சிறிய அப்பத்தையும் 2 மீன்களையும் கொடுத்தான். இயேசு அதை ஆசீர்வதித்து மிகப்பெரிய மக்கள் கூட்டத்தை போஷித்தார் (மத். 14:14-21). இந்த சிறுவன் தனக்கு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டதால் தான் இன்றைக்கும் அந்த சிறுவனைப் பற்றி 4 சுவிசேஷ புத்தகங்களில் வாசிக்க முடிகிறது.

***அன்பான வாலிபனே! உனக்கு கிடைக்கும் எந்த வாய்ப்பையும் இழந்து விடாதே. தனக்கு கிடைத்த வாய்ப்பு சிறியதோ, பெரியதோ அதை பயன்படுத்தியவர்களே ஆசீர்வதிக்கப்பட்டனர், போற்றப்படப்பட்டனர்.***

# எழுப்புதல் பெருவிழாக்கள்!

## வாலிபர் பெருவிழா

**எழுப்புதலை பிரகடனப்படுத்துவதற்காகக் கர்த்தருடைய ஊழியருக்குத் தேவன் கொடுத்த திட்டத்தின்படி கடந்த மே மாதம் 3 ஆம் தேதி முதல் 10ஆம் தேதிவரை நாலுமாவடி தேவனுடைய கூடாரத்தில் டேவிட் அரங்கத்தில் வைத்து 50 எழுப்புதல் பெருவிழாக்களை நடத்த தேவன் கிருபை செய்தார்.**

வாலிபர்களுக்கென்றுப் பிரத்யேகமாக வாலிபர் பெருவிழா நடத்த தேவன் சித்தம்கொண்டு, 7 நாட்கள் பிரித்தெடுக்கப்பட்ட வாழ்க்கை, அழைப்புக்குப் பாத்திரமாயிரு, நிலைத்திரு, பெலப்படு, விசேஷமானவன், தரிசனமுள்ளவனாயிரு, கர்த்தருக்காக வைராக்கியமாய் இரு என்ற தலைப்புகளில் வந்திருந்த வாலிபர்களுக்குக் கடைசி கால எழுப்புதலுக்கான செய்திகள் அளிக்கப்பட்டன. இக்கூட்டங்களில் ஒவ்வொரு நாளும் சுமார் 600 வாலிபர்கள் கலந்து கொண்டனர். 7 நாட்களும் 4143 வாலிபர்கள கலந்து கொண்டதில், 242 வாலிபர்கள் புதிதாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டார்கள். 240 பேரைப் புதிதாகத் தேவன் தமது ஆவியினாலே அபிஷேகம் பண்ணி அனுப்பினார். பலவிதமான பாவ கட்டுகளோடும் பிரச்சனைகளோடும் வந்த வாலிபர்களுக்காக ஆலோசனை கொடுத்து ஜெபித்ததில் 518 பேர் விடுவிக்கப்பட்டு சாட்சியாகக் கடந்து சென்றனர்.

இயேசு விடுவிக்கிறார் ஊழியர்கள் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய வார்த்தையைப் பகிர்ந்துகொண்டு ஜெபித்தபோது வந்திருந்த வாலிபர்கள் அனைவரும் எழுப்புதலின் அபிஷேகத்தை பெற்றுக் கடந்து சென்றனர். அதுமட்டுமல்லாமல் 6ஆம் தேதி மாலை 6:00 மணி முதல் 9 மணி வரை தேவனுடைய கூடாரத்தில் வைத்து வாலிபர்களுக்கென்று "சிறப்பு வாலிபர் பெருவிழா" நடத்தப்பட்டதில் சுமார் 6000 வாலிபர்கள் கலந்து கொண்டார்கள். அதில் சகோதரர் மோகன் சி. லாசரஸ் அவர்கள் "யோசேப்பு கனி தரும் திராட்சை செடி' என்ற தலைப்பில் செய்தி அளித்து வாலிபர்களை எழுப்புதல் தரிசனத்தோடு இணைந்து ஓட ஊக்கப்படுத்தி உற்சாகப்படுத்தி ஜெபித்து அனுப்பினார்கள். தேவனுக்கே மகிமை!!





கிறிஸ்தவ செய்திகள்: ஜெனிபர்

# பரபரப்பு செய்திகள்

**Hi friends, எல்லாரும் எப்படி இருக்கீங்க? பரபரப்பு செய்திகள் என்னும் இத்தொடரில் மீண்டும் உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இத்தொடரில் நாம் ஒவ்வொரு மாதமும் இயேசு கிறிஸ்து இன்றும் உயிரோடு இருக்கிறார் என்பதற்கு அத்தாட்சியாக அவர் தமது பிள்ளைகளைக் கொண்டு நிகழ்த்துகிற இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்களைப் பற்றிப் பார்த்து வருகிறோம். இம்மாதம் அப்படி நடத்தப்பட்ட அற்புதத்தைப் பற்றிப் பார்க்கலாமா?**

*Wait... wait... அதற்கு முன்பாக நமது வேதாகமத்தில் பேதுருவும், யோவானும் ஜெபிப்பதற்காக ஆலயத்திற்கு போகும்பொழுது தாயின் வயிற்றிலிருந்து சப்பாணியாய் பிறந்த ஒரு மனிதன் அவர்களைப் பார்த்துப் பிச்சை கேட்கவே, இவர்கள் அவனைப் பார்த்து வெள்ளியும், பொன்னும் என்னிடத்தில் இல்லை, இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எழுந்து நட என்று சொல்லி அவனைத் தூக்கி விட்டனர். அவனுடைய கால்கள் பலம் கொண்டு, அவன் குதித்தெழுந்து, நடந்து தேவனை மகிமைப்படுத்தினதை நாம் அப்போஸ்தலர் 3ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.*



ஆனால் இப்படிப்பட்ட அற்புதம் இந்தக் காலத்திலும் நடக்குமா என்று சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது தான், ஆப்பிரிக்காவிலிருந்து ஒரு பரபரப்பான செய்தி நமக்குக் கிடைத்தது.

''வெள்ளியும் பொன்னும் என்னிடத்தில் இல்லை இயேசுவின் நாமத்தினாலே எழுந்து நட என்று சொன்னதும் அந்தச் சப்பாணி எழுந்து நடந்தானே ஆப்பிரிக்காவிலும் இது போன்ற அற்புதங்கள் நடக்குமா'' என்று தனக்குள்ளே கேள்வியுடன் இருந்தார் மிஷனெரி ரெய்னார்ட் போங்கே.

**தன்னுடைய மிஷனெரி ஊழியத்தில் ஆங்காங்கே ஜெபித்தபோது ஒன்றிரண்டு அதிசயம் நடந்ததை பார்த்து ஆண்டவரை துதித்திருக்கிறார். ஆனால் ஒரே நேரத்தில், ஒரு சனப்பொழுதில் அற்புதம் நடக்காதா என்பது இவருக்கு ஜெபமாய், வேண்டுதலாய், ஏக்கமாய் மாறியது.**



ஒரு பிரபலமான ஊழியரை வைத்து அற்புத சுகமளிக்கும் பெருவிழா ஒன்று நடத்தினார் போங்கே. முதல் நாள் மாலை, மைதானத்தில் கூட்டம் குவிந்தது. ஆனால் கூட்டத்தின் முடிவில் அந்தப் பிரசங்கியார் சுகமளிக்கும் ஜெபத்தை ஏறெடுக்காமலேயே கூட்டத்தை முடித்துவிட்டார். நாளைக்கு சுகத்திற்காக ஜெபிப்பாரென அறிவிப்பு கொடுக்கப்பட்டது. மறுநாள் மாலை இன்னும் கூட்டம் திரண்டது. இதைப் பார்த்த போங்கே மகிழ்ச்சியுடன் செய்தியாளரை அழைத்து வரக் காரில் சென்றார். ஆனால் பிரசங்கியாரோ 'ஆவியானவர் என்னை வீட்டிற்கு போகச் சொல்கிறார்' எனச் சொல்லிவிட்டு புறப்பட்டு விட்டார். போங்கே ஸ்டியரிங் மீது கவிழ்ந்து கிடந்து அழுதாராம். இத்தனை பெரிய கூட்டத்தை ஒழுங்கு பண்ணிவிட்டு ஆவியானவர் அவரைப் போகச் சொல்லுவீரானால், ''நீர் வாரும் அதிசயம் நிகழ்த்தும்'' என்று ஜெபித்தாராம். அவருக்கு தனிப்பட்ட துணிச்சல் வரவே காரை எடுத்துக் கொண்டு கிளம்பினார் போங்கே. மேடையில் ஏறிப் பேச ஆரம்பித்தபோதே தேவ ஆவியானவரின் அசைவாடுதலை உணர்ந்தார். கூட்டம் முடிவில் குருடர்கள் எல்லாரையும் எழுந்து நில்லுங்கள் என்று எழுப்பி அவர்களுக்காக ஜெபித்தார். ''குருட்டு கண்கள் திறப்பதாக'' என்று முழக்கமிட்டார். மறு வினாடியில் ஐந்து குருடர்கள் எழும்பி நின்று ''நான் பார்க்கிறேன்'' எனச் சத்தமிட்டனராம். அதைப் பார்த்த போங்கேயும், கூட்டத்தினரும் அதிர்ந்து போயினர். அது மட்டுமா இதைப் பார்த்த ஒரு தாய் நடக்க முடியாத தன் குழந்தையைப் போங்கேயின் கையில் கொடுத்து ஜெபிக்க சொன்னார். கால்கள் மடங்கியிருந்த அந்தக் குழந்தைக்காக 'இயேசுவின் நாமத்தில் கால்கள் சுகமாவதாக' என்று சத்தமாக ஜெபித்த அவர், தன்னை அறியாமல் குழந்தையைக் கீழே நழுவ விட்டார். குழந்தையை நழுவ விட்டோமே என்று வேதனையுடன் பார்த்த அவருக்கு ஒரு அதிசயம் காத்துக் கொண்டிருந்தது. இதோ அந்தக் குழந்தையின் கால்கள் பலம் கொண்டு அது நடக்க ஆரம்பித்தது. அதைப் பார்த்த போங்கே கண்ணீருடன் சுவர்புறமாய் திரும்பி ஆண்டவரே அந்தப் பிரசங்கியாரை வீட்டிற்கு அனுப்பியதற்காக நன்றி. என்னையும் பயன்படுத்தினீரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் என்று ஜெபித்தாராம்!

**பாருங்க friends, எவ்வளவு ஆச்சரியம்...! தேவன் ஏற்ற நேரத்தில் போங்கேயின் கைகளின் மூலமாய் அற்புதம் செய்தார். பேதுரு, யோவான் மூலமாய் அற்புதம் செய்தார். நம் கைகளின் மூலமாகவும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயம் நிகழ்த்தத் தேவன் வல்லவராய் உள்ளார், அதை ஏற்றக் காலத்தில் செய்வார். அதற்காக நம்மை ஒப்பு கொடுத்துத் தேவனின் வேளைக்காய் காத்திருப்போம்.**



# கிறிஸ்தவம்

## அன்றும் இன்றும்

அன்றைய கிறிஸ்தவத்தில் பவுல் ஊழியம் செய்த ஒரு சபையின் குணாதிசயத்தை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

தகவல்: எப்சிபா

அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள் (அப் 17:11).







இந்த வசனம் பெரோயா பட்டணத்தாரைப் பற்றி சொல்லப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கு வசனத்தை கற்றுக் கொடுத்தது பவுல். They got the best teacher of that time. பவுல் கமாலியேலின் பாதத்தண்டையில் அமர்ந்து கற்றவர், இயேசுவின் தரிசனத்தால் இரட்சிக்கப்பட்டவர். ஆனாலும், அவர்கள் பவுல் சொன்னது உண்மையா இல்லையா என்று வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்த்தனர்.

இன்றைக்கு நாம் அநேக செய்திகள், ஏராளமான போதகங்கள், ஏகப்பட்ட விளக்கங்கள் கேட்கிறோம். கேட்பதில் தவறில்லை! ஆனால் அதனை ஆராய்கிறோமா? அல்லது அப்படியே ஏற்றுக் கொள்கிறோமா?

பலவிதமான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள் (எபிரெயர் 13: 9) என்று பவுல் மூலம் ஆவியானவர் நம்மை எச்சரிக்கிறார். கேட்கும் செய்திகளை ஆராயாமல் அப்படியே ஏற்றுக் கொள்வோமாகில் காற்றினால் அசையும் நாணலைப் போலிருப்போம். ஆராய்ந்து அறிந்தால் கன்மலையின் மேல் அஸ்திபாரம் போடப்பட்ட வீட்டைப் போல அசையாமல் நிலைத்திருப்போம்.

மனுஷனுடைய ஆவி கர்த்தர் தந்த தீபமாயிருக்கிறது; அது உள்ளத்தில் உள்ளவைகளை யெல்லாம் ஆராய்ந்து பார்க்கும் (நீதி. 20:27). கர்த்தர் தந்த தீபத்தின் வெளிச்சத்தில் நாம் கேள்விப்பட்ட காரியங்களைக் குறித்து ஆராயும்போது தெளிந்த புத்தியுள்ளவர்களாகிறோம். தேவனை அறியும் அறிவில் விருத்தி அடைகிறோம்.

உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது (சங். 119:105). எனக்குத் தெரிந்த ஒரு சகோதரி சபையில் செய்திகளை குறிப்பெடுப்பார்கள் வீட்டிற்கு சென்ற பின்னர் அந்த வசனங்களை வேதத்தை வைத்து நிறுத்தி நிதானமாக வாசித்து மீண்டும் ஆராய்வார்கள்.

**ஆதி கிறிஸ்தவர்களின் இந்த பழக்கம் நமக்குள்ளும் இருந்தால் நற்குணசாலிகளாய், மணவாளனுக்கு ஏற்ற மணவாட்டியாய் நம்மை மாற்றும்.**

***ஆண்டவரின் வார்த்தைகளை ஆராய்ந்து அறிந்திடுவோம்! ஆழங்களை புரிந்து அகமகிழ்ந்திடுவோம் அவரில் களிகூறுவோம்!***

உண்மை சம்பவம்: கமல் எபனேசர்

# கிறிஸ்துவுக்காக நிலைத்து நின்ற சீஷர்கள்!






கிறிஸ்துவுக்காக நிலைத்திருந்த சீஷர்களில் இந்த மாதம், நவீன காலத்து மிஷனெரிகளின் தந்தை என அழைக்கப்பட்ட வில்லியம் கேரி அவர்களைக் குறித்து பார்க்க இருக்கிறோம்.

கேரி மிகச்சிறந்த மொழிபெயர்ப்பாளர். முழு வேதத்தை 20 மொழிகளிலும், புதிய ஏற்பாட்டை 40 மொழிகளிலும் மொழிபெயர்க்கக் காரணமாய் இருந்தவர். வேதத்தின் சில பகுதிகளை 12க்கும் அதிகமான இந்திய மொழிகளில் மொழிபெயர்த்தார். இவ்வாறு தான் மொழிபெயர்த்த அநேக முக்கிய எழுத்து சுருள்களை தன் சேமிப்பு அறையில் பத்திரப்படுத்தி வைத்திருந்தார்.

ஒரு நாள் மதிய வேளையில் அவரது அச்சகத்திலும், சேமிப்பு அறையிலும் எதிர்பாராத விதமாக ஒரு தீ விபத்து ஏற்பட்டது.ஒரு நாள் இரண்டு நாள் முயற்சி அல்ல, பல ஆண்டுகள் இரவு பகலாய் கண்விழித்து செய்த கடினமான மற்றும் விடாமுயற்சியினால் தன் கைகளினால் எழுதி, வரிசைப்படி அடுக்கி வைத்திருந்த எழுத்து சுருள்கள் மற்றும் அச்சு இயந்திரங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டது. எதிர்பாராமல் நடந்த இந்த இழப்பு அவரது இருதயத்தை நொறுக்கிப் போட்டது. அன்று அவர் எழுதியதை சேமித்து வைக்க கம்ப்யூட்டர் வசதியோ, எழுத்து பணியை எளிதாக்க ஜெராக்ஸ் வசதியோ இல்லை.

இந்த இழப்பு குறித்து தன் நண்பர் ஒருவருக்கு கடிதத்தை எழுதினார். அதில், ''திரும்பவும் இந்த நிலம் உழப்பட வேண்டும். ஆனால் நாங்கள் முற்றிலும் சோர்ந்து விடாதபடி காக்கப்பட்டு வருகிறோம். சகலத்தையும் ஆளுகை செய்யும் தேவனின் தெய்வீக தன்மையையும் ஞானத்தையும் நான் சிந்தித்துப் பார்க்கும்போது ஆறுதலைப் பெற்றுக் கொள்கிறேன். ''நீங்கள் அமர்ந்திருந்து நானே தேவன் என்று அறிந்து கொள்ளுங்கள்'' என்று சங்கீதம் 46ல் கூறப்பட்டுள்ள வசனத்தை தியானித்து என்னுடைய உபத்திரவத்தின் மத்தியில் என்னை பெலப்படுத்திக் கொண்டேன். தேவன் நமக்கு செய்யக் கூடிய எல்லாவிதமான காரியங்களையும், நாம் அமைதியுடன் ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தை என் உள்ளத்தின் ஆழத்தில் வைத்து சிந்தனை செய்கிறேன்" என்பதாக எழுதியிருந்தார்.

இதை வாசித்துக் கொண்டிருக்கிற அருமையான வாலிபர்களே, வில்லியம் கேரி தன் வாழ்வில் சந்தித்த மிகப் பெரிய இழப்பின் மத்தியிலும், தேவன் மீது அவர் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கையைப் பாருங்கள். செழிப்பின் நேரத்திலும், வெற்றியின் நேரத்திலும் தேவனை மனதார துதிப்பது எளிது. ஆனால் தோல்வியிலும் இழப்பிலும் அவருக்குள் நிலைத்திருப்பது என்பது மெய்யாகவே ஒரு மேன்மையான காரியம். பிரியமானவர்களே, வில்லியம் கேரியின் இந்த மனநிலை நம்மை உற்சாகப்படுத்தட்டும். தேவனை உறுதியாய் பற்றிக் கொள்வோம். சகலத்தையும் ஆளுகை செய்யும் தேவனின் தெய்வீக தன்மையை நோக்கிப் பார்த்து, கிறிஸ்துவுக்காக நிலைத்திருப்போம். ஆமென்!

ஜெபம்: எஸ்தர்

# ஜெபக் கையேடு

## ஜூலை 2025



1 சாலை போக்குவரத்து விபத்துகளால் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 13 லட்சம் மக்கள் இறக்கின்றனர். சாலை விபத்துகளால் ஏற்படும் மரணங்கள் தடுக்கப்பட ஜெபிப்போம்.

2 சாலை விபத்தில் 5-29 வயதுக்குட்பட்ட குழந்தைகள் இளைஞர்களுக்குக் காயங்கள் மற்றும் மரண சம்பவங்கள் நடைபெறுவது தடுக்கப்பட ஜெபிப்போம்.

3 விபத்தினால் தங்கள் பெற்றோர்களையும், பிள்ளைகளையும் இழந்து திக்கற்றவர்களாக இருக்கும் குடும்பங்களுக்குக் கர்த்தர் துணையாய் இருந்து வழிநடத்த ஜெபிப்போம்.

4 குடித்துவிட்டு வாகனம் ஓட்டுவதால் அநேக சாலை விபத்துகள் ஏற்பட்டு மரணங்கள் ஏற்படுகின்றன. மது அருந்தி வாகனம் ஓட்டும் வாகன ஓட்டிகளின் உரிமம் தடை செய்யப்பட ஜெபிப்போம்.

5 சாலை விபத்தில் சிக்கி உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் நபரைக் காப்பாற்றி நல்ல சமாரியனைப் போலப் பிறர்மீது கரிசனையுள்ள அன்பினால் நிறைந்தவர்களாக ஒவ்வொருவரும் மாறிட ஜெபிப்போம்.



6 தேசங்களில் காணப்படுகின்ற குழந்தைத் தொழிலாளர்கள் மீட்கப்படவும், இந்த அடிமைத்தனத்துக்கு விரோதமாகக் கடுமையான சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படவும் ஜெபிப்போம்

7 குடும்பச் சூழ்நிலையால், கட்டாய வேலை செய்து அதிலிருந்து மீளமுடியாமல் தவிக்கின்ற சிறுபிள்ளைகள் விடுதலையாகும்படி ஜெபிப்போம்.



8 சிறுவயதிலேயே தங்களின் சந்தோஷம், கல்வி, சுதந்திரம், குடும்பத்தை இழந்து தவிக்கின்ற பிள்ளைகளுக்கு அரசும், தொண்டு நிறுவனமும் உடனடி தீர்வுகாண ஜெபிப்போம்.

9 குழந்தைகளைக் கடினமான வேலைக்கும், பாலியலுக்கும் கட்டாயப்படுத்தி, அடித்துச் சித்திரவதை செய்கின்ற மனிதர்கள் மனந்திரும்பி சிறுபிள்ளைகளை விடுவிக்க ஜெபிப்போம்.

10 சிறுபிள்ளைகள் மீது தேவ கரம் இறங்கி, பிள்ளைகளைத் தொட்டு பாதுகாத்து வழிநடத்தும்படியாய் ஜெபிப்போம்.



11 எல்லை பாதுகாப்பு பணியில் இருக்கும் 2.6 லட்சம் வீரர்கள் இரட்சிக்கப்படவும், தேவன் அவர்களுக்கு நல்ல பாதுகாப்பை கட்டளையிடவும் ஜெபிப்போம்.

12 இராணுவ வீரர்களுக்கு நல்ல ஞானமும், தெளிந்த பார்வையும் உண்டாக ஜெபிப்போம்.

13 போர் பதற்றங்கள் முற்றிலும் நிறுத்தப்படவும், தேசங்களுக்குள் ஒற்றுமையும் ஒருமனமும் உண்டாக ஜெபிப்போம்.







**14** இந்திய இராணுவம் பலம் வாய்ந்ததாகக் காணப்படவும், வீரர்கள் கடமை உணர்வுடன் தங்கள் பணியைச் செய்யவும் ஜெபிப்போம்.

**15** தங்களது பணியில் உண்மையுடனும், நேர்மையுடனும் நடந்து கொள்ளவும் கர்த்தரைக் குறித்த பயம் உண்டாகவும் ஜெபிப்போம்.

**16** இந்தியாவில் உள்ள 5 லட்சம் சபைகள் வளர்ந்து பெருகவும், அனைத்து சபைகளின் மேலும் எழுப்புதல் அக்கினி போடப்படவும் ஜெபிப்போம்.

**17** இந்திய தேசத்தில் உள்ள சபைகள் எழுப்புதலுக்கு ஆயத்தமாக்கப்பட ஜெபிப்போம்.

**18** எல்லா சபைகளும் ஆத்துமா ஆதாயம் செய்யும் சபைகளாக மாறவும், வாலிபர்கள் ஊழியம் செய்கிறவர்களாக மாறவும் ஜெபிப்போம்.

**19** தேவ இராஜ்யத்தை கட்டும் பணியில் திருச்சபைகள், ஊழியர்கள் அனைவரும் ஒருமனதோடு செயல்பட ஜெபிப்போம்.





**20** கள்ள உபதேசங்கள் சபைக்குள் வந்து விசுவாசிகளை வஞ்சிக்காதபடி தேவ ஆளுகை சபைகளில் உண்டாக ஜெபிப்போம்.

**21** இந்திய தேசம் தொழில்நுட்ப துறையில் வளர்ச்சியடையவும், பொருளாதாரம் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

**22** இந்திய தேசத்தில் வறுமை கோட்டிற்கு கீழ் வாழும் மக்களின் வாழ்வாதாரம் உயர்த்தப்பட ஜெபிப்போம்.

**23** இந்திய தேசத்திலிருக்கும் 60%க்கும் அதிகமான வாலிபர்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

**24** எதிர்கால தரிசனம் மற்றும் நோக்கம் இல்லாமல் இருக்கும் வாலிபர்கள் மனம்மாற ஜெபிப்போம்.

**25** இந்திய தேசத்தில் இருக்கும் சிறு பிள்ளைகளின் இரட்சிப்பிற்காகவும், சிறு பிள்ளைகள் மத்தியில் ஒரு எழுப்புதல் உண்டாகவும் ஜெபிப்போம்.

**26** இந்தியாவில் உள்ள 2717 மக்கள் பிரிவுகளுக்குச் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், அவர்கள் இரட்சிக்கப்படவும் ஜெபிப்போம்.

**27** இந்தியாவில் உள்ள 6.64 இலட்சம் கிராமங்களின் எழுப்புதலுக்காக ஜெபிப்போம்.

**28** 553 பழங்குடியின மக்களின் இரட்சிப்பிற்காக ஜெபிப்போம்.

**29** சுவிசேஷத்திற்கான வாசல்கள் திறக்கப்படவும், சுவிசேஷத்திற்கு எதிராக எழும்பும் வல்லமைகள் அழிக்கப்படவும் ஜெபிப்போம்.

**30** இந்தியாவில் காற்று மாசு ஏற்படாமல் தேசம் பாதுகாக்கப்படவும், அதிக மாசு வெளிப்படுத்தும் தொழிற்சாலைகளின் மீது அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கவும் ஜெபிப்போம்.

**31** காற்று மாசினால் ஏற்படும் நோய்கள் மற்றும் உயிரிழப்புகளிலிருந்து ஜனங்கள் பாதுகாக்கப்பட ஜெபிப்போம்.

# Revival IGNITERS Monthly Fellowship

**வாலிபர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வில் அனல் கொண்டு எழும்பவும், வேதத்தின் ஆழமான இரகசியங்களை அறியவும், தங்கள் தேசத்திற்காய் கூடி ஜெபித்து பெலப்படும் ஓர் இடமாகவும் IGNITERS கூடுகை அமைகிறது. நீங்களும் இக்கூடுகையில் பங்குபெற்று பெலன் அடையலாமே! உன்னை பெலப்படுத்திக் கொண்டு, பிறரையும் பெலப்படுத்த ஆயத்தப்படு! ஆயத்தப்படுத்து!**

## EVERY 1st SUNDAY (6th July)

### MUMBAI – DHARAVI (5PM – 7:30PM)
World Revival Prayer Centre, 2nd Floor, Above Balakrishna Farsan Mart, Opp. Apna Restaurant, Near Kamarajar School, 90 Feet Road,
9004882470

### VELLORE (3PM)
World Revival Prayer Centre, Ajantha Mahal, # 3, 6th West Cross Road, Gandhi Nagar
9442885315 | 9442979556

### TIRUPUR (4PM – 6:30PM)
World Revival Prayer Centre, #62, 2nd Floor, Benny Kumaran Main Road.
9442885315

### TUTICORIN (3PM – 5:30PM)
World Revival Prayer Centre, Jehovah Jireh Towers, 51/8D/3, 1st Floor, Tiruchendur Road, Muniasamypuram
Land mark: South Police Station to Kamaraj College Rd.
9442885315 | 9786212103

### TIRUPATI (3PM)
World Revival Prayer Centre, Unlimited Show Room (Opp.)
7989295442 | 9488938305

## EVERY 2nd SATURDAY (12th July)

### BANGALORE (3PM-5PM)
World Revival Prayer Centre, 57/2 Thomasappa layout (Opp) Lumbini Garden Bus Stand Outer Ring Road, Veerannapalaya (Nagavara)
9791444788 | 080 35 45 45

## EVERY 2nd SUNDAY (13th July)

### SANKARANKOIL (2:30PM – 5PM)
World Revival Prayer Centre, Sekihnah Mahal, Mullai Nagar.
9750955548 | 8344949555

### AMBUR (3PM-6PM)
Concordia Hr.Sec. School, Opp Rly.Station
9597927799 | 9442885315

### THANE (5PM - 7:30PM)
R.P. Mangala High School (Near Railway Station), Room No.10, Opp. Bank of Maharashtra, Thane (East)
9004882470

### THANJAVUR (3PM)
World Revival Prayer Centre, Near Balaji Nagar Bus Stop, 18B, TPS Nagar, MC Road
9489775075 | 9444381971

### KOVILPATTI (2:30PM -5:30PM)
St. Paul's Matriculation School (Parking area Building)
9677858766 | 9787322334

### ALANGULAM (2:30PM)
D. No. 5/2, Vaanjinathan Street, North side of TPV Mill, Thuththikulam Road,
9750955548 | 9965377427

### THENI (2:30PM – 5PM)
World Revival Prayer Centre, #203, Madurai Road, Opp. Anantham Silk, Dr. Kamaraj Hospital, 1st Floor
9750955548 | 9976766422

### SURANDAI (2:00PM)
Jawaharlal Middle School
9443962141 | 9750955548

### SATHANKULAM (3PM -5:30PM)
Hendry Matric Higher Secondary School, Mela Sathankulam.
9442885315 | 9786212103

### CHENGALPET (3PM – 5:30PM)
Reheboth Church, Near old bus stand,
9710809626 |9488475315

### NAMAKKAL (3PM -5:30PM)
World Revival Prayer Centre, 16B Naveen Nest Apartment,Podhigai Nagar, 1st street, Salem Road, Namakkal-637001
9962085523 | 94886 18305

### POLLACHI (3PM TO 6PM)
World Revival Prayer Centre, Grace Auto 1st floor, 163, Raja mill road, Pollachi,
9486037586 | 9487856205

**VILLUPURAM (3PM – 5:30PM)**
World Revival Prayer Centre, HH Complex,
Namnadu Textiles,
Opp., Shanthi Theater Rd
8870517324 | 834411022

**ERODE (4PM – 6:30PM)**
World Revival Prayer Centre, #216, 1st Floor,
Near Fire Service, Gandhiji Road
9750722000

**EVERY 3rd SATURDAY (19th July)**

**PERAMBALUR (5PM -8PM)**
World Revival Prayer Centre, M K Complex,
71, Venkatesapuram, Near Bank of Baroda,
Trichy Main Road. 9788788512

**EVERY 3rd SUNDAY (20th July)**

**TIRUNELVELI (2:30 PM)**
World Revival Prayer Centre, Shah Complex,
#43/R4, Rajendra Nagar, Trivandrum Road
9750955548 | 9047480484

**SIVAKASI (3PM -5PM)**
World Revival Prayer Centre, HOREB Complex,
1st Floor, P K N Road,
(Near Rathna vilas Bus Stop)
9677858766 | 9442906567

**COIMBATORE (4 PM)**
World Revival Prayer Centre, #90, 1st Floor,
Arts College Road, Near Charan Tower,
9894399599 | 9442885315

**TRICHY (3 PM)**
World Revival Prayer Centre, 22A, 1st Floor ,
Thennur High Road,
Near KMC Bus Stop, Thennur. 9489775075 |
8344119000

**CHENNAI (3 PM)**
World Revival Prayer Centre,
Prince Kushal Towers,
7th Floor B-Wing, Adjacent to LIC Metro,
Mount Road,
9488475315

**NALUMAVADI (3PM -5:30PM)**
Tabernacle of God, Nalumavadi
9442885315

**JEBAMALAI (2 PM)**
Keelamathapuram, Kadaiyam (via), Tenkasi Dist.
8300131000 | 9750955548

**TIRUVARUR (3:30PM)**
World Revival Prayer Centre,
1S.A. Rice Mill Complex, TTP Main Rd,
9976766322 | 7373374733

**RANIPET (3PM-6PM)**
World Revival Prayer Centre, Railway Station Road,
Zion Nagar, Near Scudder Memorial Hospital
9500283179 | 9442885315

**NAGERCOIL (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, NO: 1055 K.P ROAD,
Milk Depot Junction, Nagercoil
7598155503 | 9442885315

**PONDICHERRY (3PM TO 6PM)**
World Revival Prayer Centre, Kottupalayam
Lawspet,
opp. Latha Steel, E C R Road.
8344433800 | 9442885315

**CHITTOOR (3PM TO 6PM)**
World Revival Prayer Centre,
Kamlambal Street, Readspet,
Kangareddy palli,
9487734603

**EVERY 4th SUNDAY (27th July)**

**THIRUVALLUR (3PM -5:30PM)**
World Revival Prayer Centre, H S R Tower,
2nd Floor, Near CSI Gowdi Church
9488475315

**KARUR (3PM-5:30PM)**
CSI Boys High schools, Jawahar Bazzar,
Bunglaw Street, Karur.
9489775075

**MUMBAI-MALAD (4PM – 6PM)**
Bethel Ground Floor, 305/E, Mith Chauky,
Marve Road, Malad (W)
9664050567 | 9619996976

**PERNAMPET (3PM TO 6PM)**
Revival Prayer centre, VK Road.
9442885315

**THISAYANVILAI (2:30 PM TO 5:30 PM)**
World Revival Prayer Centre,
Near ML Hospital, Thisayanvilai.
9487810845, 9750955548

**MADURAI (3PM -5:30PM)**
Devanukae Mahimai Church,Nearby MGM Plaza,
[Theekadir Busstop] 41,
K.Salai pudur Byepass Road, Madurai
9750955548

***உங்கள் பகுதியில் நடைபெறும் Fellowshipல் தவறாமல் கலந்து கொள்ளுங்கள்; எழுப்புதலைப் பற்ற வைப்போர்களாய் மாறுங்கள்!***

தகவல்: மோசஸ்

# ஆசரிப்பு கூடாரம்

கடந்த மாதம் லேவியர்கள் யார்? அவர்களுடைய பணி என்ன? என்பதை அறிந்து கொண்டோம். இந்த மாதம் ஆசாரியர்கள் யார்? அவர்கள் எப்படி ஏற்படுத்தப்பட்டார்கள்? என்பதைப் பார்க்கப் போகிறோம்.



## ஆசாரியர்கள் (பழைய ஏற்பாடு காலத்தில்):

ஆசரிப்பு கூடாரத்தில் வேலை செய்யும்படி கர்த்தரால், கர்த்தருடைய ஊழியத்திற்கென்று வேறு பிரிக்கப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டவர்கள். எல்லா லேவியர்களும் ஆசாரியர்கள் அல்ல. லேவியரின் கோத்திரத்தில், ஆரோனின் வம்சத்தினரே ஆசாரியர்கள். ஆரோனும் அவன் குமாரருமே ஆசாரிய ஊழியத்தை செய்தார்கள். ஆரோன் பிரதான ஆசாரியராகச் செயல்பட்டார். ஆரோனிற்கு பிறகு அவன் குமாரர்களில் ஒருவன் பிரதான ஆசாரியராக ஊழியம் செய்வான். இந்தக் கனமான ஆசாரிய ஊழியத்திற்கு தேவனே ஆரோனை அழைத்தார் (எபி. 5:4). ஆரோன் தானாய் வரவுமில்லை, மனுஷரால் ஏற்படுத்தப்படவும் இல்லை. தேவனே இந்த ஊழியத்திற்காக ஆரோனின் வம்சத்தினரை தெரிந்து கொண்டதை நாம் எண்ணாகமம் 17ஆம் அதிகாரத்தில் வாசிக்கிறோம்.

**புதிய ஏற்பாடு காலத்தில்,** நம்முடைய அருமை இரட்சகர் இயேசு கிறிஸ்துவுமே எல்லா விதத்திலும் நம்மைப் போலச் சோதிக்கப்பட்டும் பாவமில்லாதவராய் இருக்கிற பிரதான ஆசாரியராய் நமக்கு இருக்கிறார் (எபி. 4:16). நீர் மெல்கிசேதேக்கின் முறைமையின்படி என்றைக்கும் ஆசாரியராயிருக்கிறீர் என்று சொல்லிய சாட்சிக்குத் தக்கதாக அழியாத வல்லமையின்படியே ஆசாரியரானார்.

பரிசுத்த வேதம் நம்மையும் ஆசாரியர்கள் என்றே சொல்லுகிறது. நம்மிடத்தில் அன்புகூர்ந்து, தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவி, நம்முடைய பிதாவாகிய தேவனுக்கு முன்பாக நம்மை இராஜாக்களும், ஆசாரியர்களுமாக்கினார் (வெளி.1:6).

> **இயேசுவும் தமது இரத்தத்தினாலே பாவங்களற நம்மைக் கழுவி, நம்மை ஆசாரியராக்கினார்.**

## ஆசாரியர்களை ஏற்படுத்தும் விதம்:

பிரதான ஆசாரியராக ஆரோனையும், ஆசாரியர்களாக ஆரோனின் குமாரர்களையும் மோசே பிரதிஷ்டை செய்த முறைமைகளை நாம் லேவியராகமம் 8ம் அதிகாரத்தில் பார்க்க முடியும்.



▸ மோசே ஆரோனையும் அவன் குமாரரையும் வரவழைத்தான் (லேவி. 8:6). அதுபோலத் தேவன் நம்மையும் அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்து இராஜரீகமான ஆசாரிய கூட்டமாக்கினார் (1 பேதுரு 2:9).

▸ ஸ்நானம் பண்ணுவித்து (தண்ணீரால் கழுவப்படுதல்) லேவியராகமம் 8:6. இது சுத்திகரித்தலையும் பரிசுத்தப்படுத்தலையும் குறிக்கிறது. இயேசுவும் தமது இரத்தத்தினாலே பாவங்களற நம்மைக் கழுவி, நம்மை ஆசாரியராக்கினார் என்று வெளி. 1:6ம் வசனத்தில் பார்க்கிறோம்.

▸ மோசே, ஆரோனுக்கு பிரதான ஆரோனுக்குரிய விசேஷித்த வஸ்திரங்களை உடுத்தி, அபிஷேக தைலத்திலே கொஞ்சம் ஆரோனுடைய சிரசின் மேல் வார்த்து, அவனை பரிசுத்தமாக்கும்படி அபிஷேகம் பண்ணினான். பின்பு ஆரோனின் குமாரருக்கு ஆசாரிய உடைகளை உடுத்தினான். "அவர் (இயேசு) இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வை எனக்கு தந்தார். நீங்களோ கர்த்தரின் ஆசாரியனென்று சொல்லப்படுவீர்கள். உங்களை நமது தேவனுடைய பணிவிடைக்காரர்களென்பார்கள்" என்று ஏசாயா 61: 6,10 வசனங்களில் வாசிக்கிறோம். நம் தலையை எண்ணெயால் அபிஷேகம் பண்ணுகிறார் (சங். 23:5).

▸ பின்பு பிரதிஷ்டைப்படுத்துவதற்குரிய ஆட்டுக்கடாவின் மேல் ஆரோனும் அவன் குமாரனும் தங்கள் கைகளை வைத்தார்கள். அது கொல்லப்பட்டது. மோசே அதன் இரத்தத்தை முதலில் ஆரோனுடைய வலது காதின் மடலிலும், வலது கை, காலின் பெருவிரலிலும் பூசி, பின்பு ஆரோனின் குமாரருக்கும் அப்படியே செய்தான். அபிஷேக தைலத்திலும் பலிபீடத்தின் மேல் இருந்த இரத்தத்தில் கொஞ்சம் எடுத்து ஆரோனையும் அவன் குமாரையும் ஆரோனின் வஸ்திரங்களிலும் அவன் குமாரர்களின் வஸ்திரங்களின் மேலும் தெளித்து பரிசுத்தப்படுத்தினார். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை பரிசுத்தப்படுத்தியது.

▸ பலியும், பலியின் பொருட்களையும் ஆரோனும் அவன் குமாரருடைய உள்ளங்கையில் கொடுத்து அசைவாட்டு பலியாகக் கர்த்தருடைய சந்நிதியில் அசைவாட்டினார்கள். பின்பு அந்த மாம்சத்தை ஆசாரிப்புக் கூடார வாசலிலே வேவித்து புசித்தார்கள். இப்படியே ஏழு நாளும் ஆசரிப்பு கூடார வாசலை விட்டுப் புறப்படாமல், ஏழு நாளளவும் பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள். இவைகளை செய்த பின்னரே ஆசாரிய ஊழியத்தை செய்யத் தகுதியுடையவர்கள் ஆனார்கள்.

***ஆரோன் அண்ணனாய் இருந்தபோதிலும், தன் தம்பியாகிய மோசேக்கு தாழ்மையுடன் கீழ்ப்படிந்தார். நாமும் தேவனுக்கும் பரிசுத்தவான்களின் சொல்லுக்கும் தாழ்மையுடன் கீழ்படிந்தால், நம்மையும் கர்த்தர் விசேஷமாகப் பயன்படுத்துவார்.***

**அடுத்த மாதம் ஆசாரியர்களின் ஊழியங்களைப் பற்றிப் பார்க்கப் போகிறோம்.**

இயேசு விடுவிக்கிறார்
வாலிபர் உலகம்
தொலைக்காட்சி நிகழ்ச்சி

Sathiyam
சத்தியம் TVயில்
சனிக்கிழமை தோறும்
6:30 மணி

காலை 7 மணிக்கு
YouTube YouTube மற்றும் Comforter
Comforter TVயிலும் பார்க்கலாம்.

LIVE STREAMING
Revival IGNITERS
ON SUNDAY 27th JULY
Time: 3:00 PM - 5:00 pm

வாலிபர்களே! உங்கள் நண்பர்களுக்கும் இந்த நிகழ்ச்சியை அறிமுகப்படுத்துங்கள். அதுமட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சி மூலம் நீங்கள் பெற்றுக்கொண்ட ஆசீர்வாதங்களை எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்!!
9750955547

IGNITERS, MONTHLY YOUTH PROGRAM IS TELECASTED LIVE ONLINE IN YOUTUBE AND FACEBOOK ON THE LAST SUNDAY OF EVERY MONTH

நிகழ்வு: ஜெயசீலன்

# நான் ஒரு ஜெப வீரன்



என் அன்பு தம்பி, தங்கச்சி ஒவ்வொரு மாதமும், "நான் ஒரு ஜெப வீரன்" என்ற தலைப்பில் நாம் பலவிதமான ஜெபங்களைப் பற்றிக் கற்று வருகிறோம். கடந்த மாதம் "எஸ்தரின் உபவாச ஜெபம் பற்றியும், அதன் விளைவுகள் என்ன" என்பதையும் கற்றுக் கொண்டோம். இந்த மாதம் போராட்ட ஜெபம் பற்றி நாம் தியானிக்க போகிறோம். போராட்ட ஜெபம் என்பது வெறுமனே தேவனிடம் வேண்டுதல் வைப்பது அல்ல; என்ன காரியமோ, அந்தக் காரியத்தைத் தேவனிடம் சொல்லி, அவருடைய வல்லமையை நம்பி ஜெபிப்பதே போராட்ட ஜெபம்.

## போராட்ட ஜெபம்

### யாக்கோபின் போராட்ட ஜெபம்:

யாக்கோபின் வாழ்நாள் முழுவதும் போராட்டங்கள் நிறைந்ததாகவே இருந்தது. தாயின் கருவில் தன் சகோதரனாகிய ஏசாவோடு போராடினான். தகப்பனிடம் சேஷ்டபுத்திர பாகத்திற்காகப் போராடினான். பின்பு, தான் விரும்பிய பெண்ணை மணப்பதற்காக 14 ஆண்டுகள் போராடினான். அவனது எல்லாப் போராட்டங்களுக்கும் மேலான போராட்டம், அவன் தேவனோடு போராடிய போராட்டமே!

யாக்கோபு இரவு முழுவதும் ஜெபிப்பதற்கு முன்பு அவன் நீதிமானாக இருக்கவில்லை. ஆனால் அவன் ஜெபத்திற்கு தேவன் பதில் கொடுப்பார் என்று அறிந்திருந்தான். ஏசா தன்னைக் கொல்லவிருப்பதை அறிந்ததும் தன் வீட்டைவிட்டு வெளியேறித் தன் மாமன் லாபான் வீட்டிற்குச் செல்லும் வழியில் ஓரிடத்தில் இராத்தங்கினான். பூமியையும் வானத்தையும் இணைக்கும் ஓர் ஏணியையும், தேவதூதர்கள் மேலும் கீழும் இறங்குகிறதையும் கனவில் கண்டு விழித்தான். ஆண்டவர் அவ்விடத்தில் இருப்பதை உணர்ந்தான்.



யாக்கோபு 20 ஆண்டுகள் லாபான் வீட்டில் வசித்தான். லாபானின் இரு குமாரத்திகளைத் திருமணம் செய்தான். பிள்ளைகளால் ஆசீர்வதிக்கப்பட்டுச் செல்வம் கொழிக்க வாழ்ந்து, இறுதியில் தன் வீடு திரும்பினான். வீட்டை நெருங்கும் நேரத்தில் தன் சகோதரன் ஏசாவைச் சந்திக்கவேண்டுமே என்ற எண்ணம் உண்டாக, மிகவும் பயந்தான். **"(யாக்கோபு) தன்னுடைய பதினொரு குமாரரையும் கூட்டிக்கொண்டு, யாப்போக்கு என்கிற ஆற்றின் துறையைக் கடந்தான்"** (ஆதி. 32:22). ஆதியாகம புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பல ஆறுகளில் யாப்போக்கு என்ற ஆறும் ஒன்று. யாப்போக்கு ஆற்றங்கரையில் யாக்கோபு தேவனோடு போராடினதுதான் மிகச் சிறந்த போராட்டமாக வேதத்தில் பார்க்கிறோம்.

**"யாக்கோபு பிந்தித் தனித்திருந்தான்; அப்பொழுது ஒரு புருஷன் பொழுது விடியுமளவும் அவனுடனே போராடி, அவனை மேற்கொள்ளாததைக் கண்டு, அவனுடைய தொடைச்சந்தைத் தொட்டார்; அதினால் அவருடனே போராடுகையில் யாக்கோபின் தொடைச்சந்து சுளுக்கிற்று"**

**(ஆதி. 32:24, 25).**

ஆற்றின் கரையைக் கடந்து, யாக்கோபு தனித்து இருந்தபோது ஒரு புருஷன் யாக்கோபோடு விடியுமளவும் போராடினார். யாக்கோபும் தொடர்ந்து அவரோடுகூட போராடினான். பொழுது விடிகிறது நான் போகட்டும் என்று சொன்னபோதும் விடாமல் பற்றிக் கொண்டு, நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன் (**ஆதி. 32:26**) என்று சொல்லிப் போராடி மிகப் பெரிய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டான்.



யாக்கோபு தேவனோடு போராடினதினால் கர்த்தர் யாக்கோபை ஆசீர்வதித்து, **"உன் பேர் இனி யாக்கோபு என்னப்படாமல் இஸ்ரவேல் என்னப்படும்; தேவனோடும் மனிதரோடும் போராடி மேற்கொண்டாயே என்றார்"** (ஆதி. 32:28). எத்தனாக இருந்த அவன் இஸ்ரவேல் என்ற பெயரைச் சுதந்தரித்துக் கொண்டான் (**ஆதி. 32:26**). யாக்கோபு தன் வாழ்க்கையின் ஆசீர்வாதத்திற்காக அழுது ஜெபித்து போராடினான். இந்தப் போராட்டமுள்ள ஜெபத்தை ஒருவேளை யாக்கோபு செய்யாதிருந்திருந்தால் இஸ்ரவேல் என்றொரு ஜாதி உருவாக வாய்ப்பு இல்லாமல் போயிருக்கலாம்.

யாப்போக்கு ஆற்றின் கரையில் கர்த்தரோடு போராடிய போராட்டத்தின் விளைவாக எத்தனாயிருந்த அவன் தேவ பிரபுவாய் மாறினான். அந்தப் போராட்ட ஜெபம் ஏசாவோடு சமாதானமாகும்படி வழி செய்தது. பல ஆண்டு காலமாகப் பிரிந்திருந்த சகோதரர்கள் ஒன்று சேர்ந்தார்கள். இது எத்தனை சந்தோஷமானது!

## போராட்ட ஜெபம் செய்த பல நபர்களை வேதத்தில் பார்க்கிறோம்

**மோசே:** மோசே தண்ணீர் வரும்படி ஜெபித்து, தேவன் மூலம் தண்ணீரைப் பெற்று, தேசத்துக்கு ஆசீர்வாதம் பெற்றுத் தந்தார்.

**தாவீது:** தேவனை நோக்கிப் போராடி ஜெபித்து, சத்துருக்களோடு வெற்றி பெற்றான்.

*அன்பு பிள்ளைகளே! நீங்கள் இரவு நேரங்களில் தேவனோடு போராடி ஜெபிக்கிற ஜெபங்கள் உங்கள் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரும். 'நீர் என்னை ஆசீர்வதித்தாலொழிய உம்மைப் போகவிடேன்' என்று தேவனோடு தனியாகப் போராடி, யாக்கோபு ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டது போல நீங்களும் உங்களின் ஆசிர்வாதங்களுக்காகத் தேவனோடு போராடி ஜெபித்து அவைகளை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். யாக்கோபை இஸ்ரவேலாய் மாற்றியவர் உங்களையும் நிச்சயமாகவே ஆவிக்குரியவர்களாய் மாற்றுவார். உங்கள் காரியங்கள் ஜெயமாய் விளங்கும்...!*

சித்தூரில்...

வாலிபர் எழுப்புதல் கூடுகை

ஆகஸ்ட் 3,
ஞாயிற்றுக் கிழமை
நேரம்: 3pm-6pm

இடம்:
World Revival Prayer Centre
Kamlambal Street,
Readspet, K R Palli



செய்தியும் ஜெபமும்: சகோ. அவினாஷ்

தொடர்புக்கு : 9487734603

வரலாறு: சுதர்சன்

# மீண்டும் துளிர்த்த அத்திமரம்

## மீண்டும் துளிர்த்த அத்திமரத்திற்காக யுத்தம் பண்ணும் தேவன்!

**அன்பு நண்பர்களுக்கு இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள். மீண்டும் துளிர்த்த அத்திமரம் என்ற சரித்திர பக்கத்தின் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி.**

**இந்த மாதம் இஸ்ரவேல் தேசம் சந்தித்த யுத்தங்களையும் அதின் விளைவுகளையும் நாம் பார்க்க போகிறோம். வேதாகம காலத்தில் உள்ள யுத்தங்களை நீங்கள் வாசித்திருப்பீர்கள் அல்லது செய்தியாக கேட்டிருப்பீர்கள் தியானித்திருப்பீர்கள். வேதத்திற்கு அப்பாற்பட்டு வரலாற்றில் இஸ்ரவேல் தேசம் சந்தித்த யுத்தங்களையும் அதில் கிடைத்த வெற்றிகளையும் இந்த மாதத்தில் நாம் அறிந்து கொள்வோம்.**

அன்பு நண்பர்களே, ஆபிரகாமை தேவன் அழைத்த நாளிலிருந்து அநேக யுத்தங்களை இஸ்ரவேலர் சந்தித்துக் கொண்டுதான் வந்தனர். அதில் வெற்றி பெற்ற அநேக யுத்தங்களும் உண்டு, அதே சமயத்தில் தோல்வியுற்ற யுத்தங்களும் உண்டு.

''அந்த இராஜாக்கள் எல்லாரையும் அவர்கள் தேசத்தையும் யோசுவா ஒருமிக்கப் பிடித்தான்; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம்பண்ணினார்'' (யோசுவா 10:42). இந்த வசனத்திலிருந்து தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலருக்காக யுத்தம் பண்ணினார் என்று அறிந்து கொள்ள முடியும்.

**“அன்று ராத்திரி தேவன் சீரியா தேசத்தானாகிய லாபானுக்குச் சொப்பனத்தில் தோன்றி: நீ யாக்கோபோடே நன்மையே அன்றித் தீமை ஒன்றும் பேசாதபடிக்கு எச்சரிக்கையாயிரு என்றார்”** (ஆதியாகமம் 31:24). வானத்தையும் பூமியையும் படைத்த தேவன், ஒரு இன மக்களுக்காக யுத்தம் பண்ணும்படி இறங்கி வருவாரானால் இந்த ஜனத்தை எவ்வளவு நேசிக்கிறார் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது அல்லவா? ஆம், தான் தெரிந்து கொண்ட ஜனத்தை யாரும் தொடாதபடி யுத்தம் பண்ணுகிறவர் நம் தேவன்.




**1948 மே 14** ஆம் நாள் இஸ்ரவேல் தேசம் உருவானது. கடந்த மாதத்தில் இதைக் குறித்து தெளிவாக அறிந்து கொண்டோம். இஸ்ரவேல் தேசம் உருவான அடுத்த நாளே அண்டை நாடுகளான எகிப்து, யோர்தான், சிரியா, லெபனான், ஈராக் போன்ற நாடுகள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் செய்தனர். அரபு நாடுகள் இணைந்து இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் செய்ததால் இது **அரபு இஸ்ரேலிய போர்** என்று அழைக்கப்பட்டது. இந்த யுத்தமானது

பாலஸ்தீனர்களுக்கு ஆதரவாகவும் இஸ்ரவேல் மேல் பொறாமையோடும் மேற்கொள்ளப்பட்டது. இந்த யுத்தத்தில் அண்டை நாட்டினர் பாலஸ்தீனர்களுக்கு ஓர் அழைப்பு கொடுத்தனர் நீங்கள் வெளியே வந்து விடுங்கள், நாங்கள் இஸ்ரவேலரை அழித்து அந்த நாட்டை உங்களுக்கே தந்து விடுகிறோம் என்று சொன்னார்கள் அதே சமயத்தில் இஸ்ரவேலின் முதல் பிரதமராக இருந்த டேவிட் பென்-குரியன் இங்கேயே இருங்கள் நாம் இணைந்து யுத்தம் செய்வோம் என்று அறைகூவல் கொடுத்தார். ஆனால் பாலஸ்தீனர்கள் நாட்டை விட்டு வெளியேறினர். எப்படியும் அண்டை நாட்டினர் வென்று விடுவார்கள் என்ற தைரியத்தில் சென்றார்கள். ஆனால் காரியம் மாறுதலாய் முடிந்தது. 'இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்', **ஒரு வழியாய் உனக்கு எதிராகப் புறப்பட்டு வருவார்கள்; ஏழு வழியாய் உனக்கு முன்பாக ஓடிப்போவார்கள்** (உபாகமம் 28:7) என்ற வார்த்தையின் படி, கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் செய்தார். யுத்தத்தில் இஸ்ரவேலர்கள் ஜெயம் கொண்டார்கள். வெளியேறிய பாலஸ்தீனர்கள் அகதிகளாகவே இன்று வரை இஸ்ரவேலை சார்ந்து இஸ்ரேலிய வனாந்திரங்களில் வாழ்ந்து வருகிறார்கள். எப்பொழுதெல்லாம் இஸ்ரவேலர் யுத்தத்தை சந்தித்தார்களோ, அப்பொழுதெல்லாம் தங்கள் எல்லைகளை பெருக்கிக் கொண்டார்கள். காரணம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார்.

**இந்த யுத்தத்தில் இஸ்ரவேலின் சார்பாக யுத்தம் பண்ணினவர்களின் எண்ணிக்கை ஆரம்பத்தில் சுமார் 30,000 முடிவில் சுமார் 1,15,000**





**எதிராக யுத்தம் பண்ணின நாடுகள்**



யோர்தான் 8,000 -12,000
எகிப்து 10,000-20,000
லெபனான் 1,000
சிரியா 2,500-5,000
ஈராக் 3,000-15,000
ஏமன் 300
சவுதி அரேபியா 800 -1,200



**இதேபோல் இன்னொரு முக்கியமான யுத்தத்தை குறித்து காணலாம். 1967 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 5ம் தேதி முதல் 10ம் தேதிவரை இந்த தாக்குதல் இஸ்ரவேலுக்கு விரோதமாக நடைபெற்றது. இந்த யுத்தத்தை 'Six-days war' அல்லது அரபு இஸ்ரேல் போர் என்றும் அழைப்பார்கள்.**

இந்த யுத்தத்தில் எகிப்து, சிரியா, யோர்தான் இந்த மூன்று நாடுகளும் இணைந்து இஸ்ரவேலை தாக்கினது. இவர்களுக்கு துணையாக சில அரபு நாடுகள் இணைந்து கொண்டன. அவைகள் ஈராக், சவுதி அரேபியா மொராக்கோ, அல்ஜீரியா, லிபியா, குவைத், துனுஷியா, சூடான் மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கம். இவை இணைந்து இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம் பண்ணியும் தோல்வியை சந்தித்தார்கள். காரணம் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணினார். இந்த யுத்தத்தின் முடிவில் இஸ்ரவேல் தேசம் காசா கரையையும், சீனாய் தீபகற்பத்தையும் எகிப்து தேசத்திடமிருந்து கைப்பற்றியது. கிழக்கு எருசலேம் உட்பட மேற்கு கரையினை இவர்களிடமிருந்து கைப்பற்றியது. கோலம் குன்றுகள் என்னும் வட எல்லையில் உள்ள முக்கிய பகுதியையும் சிரியா தேசத்திடமிருந்து இஸ்ரவேல் தேசம் கைப்பற்றியது.

**இஸ்ரவேல்**

50,000 படைகள்
2,14,000 நெருக்கடி காலப் படைகள்
300 போர் விமானங்கள்
800 இராணுவ வாகனங்கள்
மொத்த படைகள்: 2,64,000
1,00,000 நிறுத்திவைக்கப்பட்ட படைகள்

எகிப்து: 2,40,000
சிரியா, யோர்தான், ஈராக்: 3,07,000
957 போர் விமானங்கள்
2,504 இராணுவ வாகனங்கள்
மொத்த படைகள்: 5,47,000
2,40,000 நிறுத்திவைக்கப்பட்ட படைகள்

'பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும்'; 'பலமுள்ளவனுக்காகிலும் பலனற்றவனுக்காகிலும் உதவி செய்கிறது உமக்கு லேசான காரியம்' என்ற வார்த்தையின்படி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இஸ்ரவேலரின் பட்சத்தில் இருந்தபடியால் இஸ்ரவேலர்கள் மேற்கொண்டார்கள்.

அன்பு நண்பர்களே, நீங்களும் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். தேவனால் விசேஷமாக பிரித்தெடுக்கப்பட்டவர்கள். இஸ்ரவேலுக்காக யுத்தம் பண்ணின தேவன் உங்களுக்காகவும் யுத்தம் பண்ணுவார் உங்கள் பட்சத்தில் நின்று உங்களுக்கு ஜெயம் தருவார்.

நாங்கள் எந்த தேசத்துக்கும் விரோதமாக எழும்பி யுத்தம் செய்ய மாட்டோம்.

மாறாக எங்கள் நாட்டையும் எங்கள் நாட்டு மக்களையும் பாதுகாக்கவே நாங்கள் யுத்தம் செய்கிறோம்.

- *பெஞ்சமின் நெதன்யாகு*
*(இஸ்ரேலிய பிரதமர்)*



**இஸ்ரேல் சுதந்தரம் அடைந்தபின் சந்தித்த யுத்தங்கள்**

*1948 arab Israel war*
*1956 suez crisis war*
*1967 six days war*
*1973 yom kippur war*
*1982 Lebanon war*
*1987- 1993 first intifada*
*2000- 2005 second intifada*
*2006 - 2007 farah hamas split*
*2023 Present Gaza war*













**அடுத்த மாதம் இயேசு விடுவிக்கிறார் ஊழியத்திற்கும் மீண்டும் துளிர்த்த அத்தி மரத்திற்கும் உள்ள தொடர்பை குறித்து அறிந்து கொள்ளலாம்!**

# செய்திகள்

## AI வருகையால் IBM-ல் 8,000 பேர் வேலையிழப்பு




ஏ.ஐ. தொழில்நுட்பத்தின் வருகையை அடுத்து தகவல் தொழில்நுட்ப (ஏ.ஐ.) துறை அண்மைக்காலமாக அதிக பணிநீக்கங்களை சந்தித்து வருகிறது. குறிப்பாக, மைக்ரோசாப்ட் நிறுவனம் சமீபத்தில் 6,700 ஊழியர்களைப் பணிநீக்கம் செய்வதற்கான அறிவிப்பை வெளியிட்டது. இப்போது, ஐ.பி.எம் நிறுவனம் 8,000 பணியாளர்களை நீக்கம் செய்ய முடிவெடுத்துள்ளது. இதில், மனிதவள துறையைச் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அதிகம் என்று கூறப்படுகிறது. அந்தப் பணிகளைச் செய்ய ஏ.ஐ. தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்ட குறுகிய காலத்தில் இந்தப் பணிநீக்க அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தகவல் தொழில்நுட்ப துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு வேலைகளைச் செய்ய ஏ.ஐ. தொழில்நுட்பத்தை அவர்கள் அதிக அளவில் நம்பியுள்ளனர். இதனால், பல்வேறு பிரிவுகளில் உள்ள பணியாளர்கள் அடுத்தடுத்து நீக்கப்படும் சூழல் உருவாகியுள்ளது. தகவல்களை ஒழுங்கமைத்தல், ஊழியர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பது மற்றும் உள் ஆவணங்களை நிர்வகித்தல் போன்ற பணிகளைக் கையாளக்கூடிய மென்பொருளை ஐ.பி.எம். நிறுவனம் உருவாக்கியுள்ளது. இந்தப் பணிகள் மனித தலையீடு தேவையில்லாதவையாகும்.

வேலையை மிகவும் திறமையாக்கும் புதிய ஏ.ஐ. தொழில்நுட்பங்களைச் சேர்க்க ஐபிஎம் அதன் குழுக்களை எவ்வாறு ஒழுங்கமைத்து வருகிறது என்பதற்கு இந்தப் பணிநீக்க அறிவிப்பு எடுத்துக்காட்டாக மாறியுள்ளது. குறிப்பாக, மனித வளங்கள் போன்ற பிரிவுகளில் ஏ.ஐ. தொழில்நுட்பம் சக்திவாய்ந்ததாக மாறி வருவதை ஐபிஎம் நிறுவனத்தின் இந்த நடவடிக்கை எடுத்துக்காட்டுகிறது.

இதுகுறித்து அதன் தலைமை நிர்வாக அதிகாரி அரவிந்த் கிருஷ்ணா கூறுகையில், "சில வணிக செயல்முறைகளை மேம்படுத்தவும், குழுக்கள் மிகவும் திறமையாகச் செயல்படவும் ஏ.ஐ. மற்றும் ஆட்டோமேஷன் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. இந்த மாற்றங்கள் இருந்தபோதிலும், மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை உண்மையில் அதிகரித்துள்ளது" என்றார்.

**– இந்து தமிழ் திசை, ஜூன் 7, 2025**

Owned & Published by: Brother Mohan C. Lazarus from Jesus Redeems, Nalumavadi 628 211 &
Printed by: Mrs. Joyce Lazarus at Angel Press, 13/82 A, Lakhsmipuram, Nalumavadi - 628 211

Registered with Registered News Paper of India No: TNBIL/2010/32847
Postal Registration No: TTN/26/2023-2025.
Date of Publication: 25 – 06 -2025
Date of Posting: 28th to 30th of every month.
Office of Posting: BPC, Thoothukudi HPO – 628 001.
Licensed to Post Without Prepayment No: TN/WPP-108/SR/2023-2025.

ஆகஸ்ட்
27 காலை 9.00 மணிக்கு
புதன்கிழமை

கோவையில்
திறப்பிலே நிற்கும் 7000 வாலிபரை தேடி



திறப்பிலே நிற்கும் வாலிபரைத் தேடி 7000 ACTION ARMY

# வாலிபர்
## எழுப்புதல் மாநாடு

தேவ செய்தி : சகோ.மோகன் சி. லாசரஸ்
சகோ.வின்சென்ட் செல்வக்குமார் | பாஸ்டர். பென்ஸ் | சகோ.சாம் ஜெபராஜ்

இந்துஸ்தான் கல்லூரி, அவிநாசி சாலை, கோவை.

முன்பதிவு செய்து

முகாம் முடிந்த பின்பு
உணவு வழங்கப்படும்

பென், நோட்பேடு, பேட்ஜ், உணவுக்கான டோக்கனை பெற்றுக் கொள்ளவும்.

9111 333 206 / 9111 333 706